# உலகத்தமிழ்

திங்கள் மின்னிதழ்

*மார்ச்சு 2023*



**நாட்டுப்புறக்கலை – புலியாட்டம்**



# அட்டைப்பட விளக்கம்...

## புலியாட்டம்...

புலி வேடமிட்டு ஆடப்படும் ஆட்டம் புலி ஆட்டம் ஆகும். வரிப் புலி போல் மஞ்சள், கறுப்பு, இளஞ்சிகப்பு வண்ண பூச்சுக்களால் உடலைப் பூசுவர். புலிமுகமுடைய முகம்மூடி, புலிக்காது, புலிவால், புலி நகங்கள் ஆகியவை அணிவர். காலில் சலங்கையும் கட்டுவர்.

புலிகளுக்கு இடையே சண்டையிடல், சேட்டை பண்ணுதல், ஆட்டைக் கண்டால் பதுங்குதல், பாய்ந்து செல்லுதல், தாக்குதல், உறுமுதல் போன்ற செயல்களை நடித்துக் காட்டுவர். மேலும், சிலம்பாட்டம் ஆடல், பந்தங்கள் சுழற்றி ஆடுதல் போன்றவை புலியாட்டத்தின் முக்கிய நிகழ்வுகள் ஆகும்.

சாமி ஊர்வல நிகழ்ச்சிகளில் புலிவேடக்காரர்கள் ஒருமுறை ஆடத் தொடங்கினால் அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் வரை ஆடுவர். இவர்கள் திண்டுக்கல், மதுரை, சேலம், வேலூர் போன்ற ஊர்களிலும் குறிப்பாக தஞ்சை பகுதியில் புலிவேடக் கலைஞர்கள் மிகுதியாக உள்ளனர்.





மலர் – 3 | இதழ் – 7 | மார்ச்சு 2023

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையின்

# உலகத்தமிழ்

## திங்கள் மின்னிதழ்

**ஆசிரியர்**

திரு. **மு.சம்சுதீன்**
இயக்குநர் (பொ),
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

**துணை ஆசிரியர்கள்**

முனைவர் **சு.சோமசுந்தரி**
ஆய்வறிஞர்

திருமதி **ஜ.ஜான்சிராணி**
ஆய்வு வளமையர்

**செய்தி ஆசிரியர்**

முனைவர் **சி.புவியரசு**
மின்னிதழ் உருவாக்குநர்

**இதழ் வடிவமைப்பு**

திருமதி **பெ.செல்வராணி**
கணினி செயல்முறையாளர்

தொடர்புக்கு

0452-2530766/2530799

utsmdu2@gmail.com

Uts Mdu

@TamilUlaga

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

**அட்டைப்பட ஓவியம்**

ஓவியர் **அ.கண்ணன்,** மதுரை

**முகவரி**

**இயக்குநர்,**
**உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை**
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை – 625 020.

அன்புள்ள நண்பர்களே!

வணக்கம்,

பெரியோரின் துணைகொண்டுதான் முன்னோர் காலம் தொட்டே மன்னர்களும் தலைவர்களும் தங்களுக்கான செயல்களை மேற்கொண்டனர். இது வழக்கமான ஒன்றாகவே காலம் காலமாக நம்மிடையே இருந்து வருகிறது. இம்மாண்பினை உணர்ந்துதான் உலகப் பொதுமறையாம் திருக்குறளில் வள்ளுவர் பெரியாரைத் துணைக்கோடல் என்ற அதிகாரத்தை வகுத்தார். ஒரு செயலைச் செய்வதற்கு முன்பே பெரியோரின் ஆலோசனையை ஏற்று, அச்செயலில் ஈடுபடும்போது நன்மை, தீமைகளை உணர்ந்து ஈடுபடமுடியும். அதனால் அச்செயல் வெற்றிபெற ஏதுவாகும். இத்தகு நடைமுறைகள் தற்போது மாறி வருகின்றன. இது இளைஞர்கள் தவறான பாதைக்குச் செல்வதற்கும் எடுத்த காரியத்தில் தோல்வியடைவதற்கும் வழிவகுக்கும். இதனை உணர்ந்தே நம் முன்னோர்,

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும் –குறள்.448

மன்னனாக ஆளுகின்றவனுக்குக் கூட தவறுகளைச் சுட்டிக்காட்ட ஆள் இல்லாவிட்டால் கெடுப்பார் யாரும் இல்லாமலேயே தானே கெட்டு அழிவான் என்கிறார் வள்ளுவர். இன்றைய இளந்தலைமுறையினர் முன்னோர் மாண்பினைப் போற்றிட வேண்டும். சர்வதேச மகளிர் நாள் மார்ச்சுத் திங்களில் வருவதால் மகளிர் அனைவருக்கும் வாழ்த்துகள்!. மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் மார்ச்சுத் திங்களிதழை வாசித்தும் பகிர்ந்தும் மகிழ்வீர்!.

நன்றி!

திரு. மு.சம்சுதீன்
ஆசிரியர்

# உலகத்தமிழ்

## திங்கள் மின்னிதழ்


# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. குறுந்தொகை பாடல்களின் பொருள் கட்டமைப்பு | – | 5 |
| 2. கவித்துளிகள் | – | 8 |
| 3. திருக்குறளும் சாணக்கிய நீதியும் கூறும் காகம் மற்றும் ஆந்தையின் குணங்கள் | – | 9 |
| 4. துளிர்க்கும் சருகுகள்... | – | 11 |
| 5. பத்துப்பாட்டு பாடல்களின் தொன்மையும் இலக்கிய நயமும் (தொடர்ச்சி) | – | 12 |
| 6. திருவிளையாடல் படலம் – 3 | – | 16 |
| 7. தமிழ் பகுப்பாக்கம் மற்றும் சொல்லாக்கம் | – | 17 |
| 8. மொழிபெயர்ப்புக் கவிதை | – | 20 |
| 9. சங்கச்சுவடுகள் | – | 21 |
| 10. பெண் தந்த பெண்! | – | 23 |
| 11. நாளும் ஒரு நற்சிந்தனை | – | 24 |
| 12. பனித்துளி | – | 27 |
| 13. ஒரு டாக்ஸி கதை சொல்கிறது... (சிறுகதை) | – | 28 |
| 14. திங்களும்... சிறப்பும்... | – | 30 |
| 15. தடம்... | – | 34 |
| 16. இலக்கியப் பேழை | – | 35 |
| 17. அறிவிப்பும் அழைப்பும் | – | 37 |

# குறுந்தொகைப் பாடல்களின் பொருள் கட்டமைப்பு

பகுதி–I

முனைவர் **மு.மணிவேல்**
மதுரை

செம்மொழித் தமிழின் தொன்மை இலக்கியங்களாகவும் செவ்வியல் இலக்கியங் களாகவும் சிறந்து விளங்குவன சங்க இலக்கியங்கள். இவை தனிப்பாட்டுக்களின் நூல்களாகவும், பலர் பாடிய பல பாடல்களின் தொகுப்பு நூல்களாகவும் அமைக்கப் பெற்றுள்ளன. அவ்வகையில் பத்து பாட்டு நூல்களும் எட்டுத்தொகை நூல்களும் சங்க நூல்கள் எனப்படுகின்றன. இவை அனைத்திலும் அமையப்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை 2381. பாடிய புலவர்களின் எண்ணிக்கை 473க்கும் மேல். புலவர் பெயரில்லாப் பாடல்கள் 50 க்கும் மேற்பட்டன காணக் கிடைக்கின்றன.

மேற்குறித்த சங்கப்பாடல்கள் காதற்பொருண்மை குறித்த அகப்பாடல்களின் தொகுதிகளாகவும் காதல் அல்லாத பிற பொருண்மைகள் குறித்த புறப்பாடல்களின் தொகுதிகளாகவும் இரண்டு பொருள்களும் சார்ந்த பாடல்களின் தொகுதியாகவும் தனிப்பாட்டு நூல்களாகவும் அமையுமாறு தொகுத்தமைக்கப் பெற்றுள்ளன. பொருண்மை நிலையில் அகப்பாடல்களின் எண்ணிக்கை 1862. புறப்பாடல்களின் எண்ணிக்கை 579. தொகை நூல்களாக அமைந்தவற்றைத் தொகுத்தோர், தொகுப்பித்தோர் பற்றிய சில செய்திகள் அறியப்படுகின்றன. பாடிய புலவர்கள் மற்றும் பாடப்பெற்ற திணைகள் அடிப்படையிலும் தொகைநூல்கள் தொகுத்து அமைக்கப் பெற்றுள்ளன.

சங்கப் பாடல்கள் ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாடல் ஆகிய பா வடிவங்களில் பாடப்பெற்றுள்ளன. மூன்று பா வடிவிலும் பாடிய ஒரே சங்கப் புலவர் நல்லந்துவனார் ஆவார். சங்கப் பாடல்கள் பெரும்பான்மையும் முன்னிலைக் கூற்றில் அமைந்துள்ளன. ஒருவர் எதிர்நிற்கும் ஒருவர்க்குக் கூறுவது, ஒருவர் தன் நெஞ்சினை முன்னிலைப்படுத்திக் கூறுவது என்ற வகையில் பாடப் பெற்றுள்ளன. சங்கப் பாடல்கள் 2381–ம் முன்னிலை அசையான ஏகாரத்தில் முடியப் பெற்றுள்ளது சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும். சங்கப் பாடல்களில் பெரிதும் பயின்று வரும் ஆசிரியப்பா அகவல் ஓசை உடையது, படுத்தல் ஓசையால் ஆனது, மெல்லப் பேசும் அகப்பாட்டுச் செய்திக்கு ஏற்றது. பாடல்களைத் தொகுத்தோர் செயல் நிகழ்வுக்குரியதான நிலச்சார்பும், பொழுதின் சார்பும்உயர்திணை மற்றும் அஃறிணைப் பொருள்களின் இருப்பியல் சார்பும், நிகழ்வுகளின் அமைவும் நோக்கித் திணை, துறைகளைச் சுட்டியுள்ளனர்.

இச்சுட்டுதலுக்குத் தொல்காப்பியர் முதலான இலக்கணக்காரர்களின் பொருளியல்

செய்திகள் பயன்கொள்ளப்பட்டுள்ளமை அறியத்தக்கதாகும்.

அடி எண்ணிக்கையால் பெரிதும் சிறிதுமாகக் காணத்தகும் சங்கப் பாடல்கள் 3 அடி முதல் 31 அடிவரை அமையப் பெற்றுள்ளன. பாடலடிகளின் அமைவு நிலையிலும் சங்கத் தொகை நூல்களில் பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன. பெரிதும் சிறிதுமான சங்கப் பாடல்களில் அமையும் பொருட்கூறுகள், உள்கட்டமைப்பு, பொருள் புலப்படுத்துதல், பாடியோர் தனித்திறன், பாடல்களுக்கிடையே பொருள் உணர்த்துதலில் பொதுத்தன்மை போன்றவற்றைப் பாடல்களை நுணுகி ஆராயும் போது அறியலாம்.

சங்கப் பாடல்களைக் கற்போர் அவற்றில் கூற்றும், கேட்பும், பொருண்மையும் இருத்தலை அறியவும் உணரவும் இயலும். ஆதலின் சங்கப் பாடல்களில் பாடியோர், பாடப்பட்டோர், பாடப் பெற்றவை என்பவற்றோடு கூற்றுடையார், கூற்றறிவார் பற்றியும், கூற்றிற்கான சூழல் களையும் அறியவியலும்.

மேற்குறித்த செய்திகள் சங்கப்பாட்டு, தொகை நூல் பாடல்களின் வழி அறியத்தக்க சில பொதுவானதும் சிறப்பானதுமான செய்திகள். இதன் தொடர்ச்சியில் குறுந் தொகைப் பாடல்களின் பொருள் கட்டமைப் பினைச் சில பாடல்களின்வழி அறவிக்கும் செயலிலான இக்கட்டுரையில் முதற்கண் குறுந்தொகைப் பாடல்கள் தொடர்புபட்ட சில செய்திகள் இவண் குறிக்கப்படுகின்றன.

‘நல்ல குறுந்தொகை’ எனப் போற்றப் படும் குறுந்தொகை சங்கத்தொகை நூல்களில் இரண்டாவதாக வைக்கப்பெற்றுள்ளது. 4 அடி முதல் 8 அடிவரையிலான கடவுள் வாழ்த்தும் திணைப்பாடல்களும் என 401 பாடல்கள் இத்தொகை நூலில் குறுந்தொகைப் பாடல்களாக அமைந்துள்ளன. 203 புலவர்கள் பாடியவர்களாகத் தெரியப்படுகின்றனர். பாடிய புலவர் பெயர் தெரியாத பாடல்கள் 10. இத்தொகை நூலில் மட்டும் பாடியோர் 112 புலவர்கள். பாடல்கள் அனைத்தும் அகவல் ஓசையினை உடைய ஆசிரியப்பாவின. இப்பாடல்களைத் தொகுத்தவர் பூரிக்கோ என்றும், தொகுப்பித்தவர் யாரென்று அறியப்பட வில்லை என்றும் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறித்துள்ளனர். அகநானூறு, கலித்தொகை, ஐங்குறுநூறு போலத் திணை அடிப்படைத் தொகுப்பில்லை. ஐந்திணை சார்ந்த முதல், கரு, உரிப்பொருள் கலந்த பாடல்கள் முறைமையின்றி இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன.

குறுந்தொகைப் பாடல்கள் 1915 முதல் தொகுத்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. தி.சௌ. அரங்கசாமி அய்யங்கார் (1915), கா.ரா. நமச்சிவாய முதலியார் (1920),இராம.இரத்தினம் அய்யர் (1930), சோ.அருணாசல தேசிகர் (1933), உ.வே.சாமிநாதையர் (1937), பொ.வே.சோம சுந்தனார் (1955), புலியூர் கேசிகன் (1965), மு.சண்முகம்பிள்ளை (1985) முதலானோர் பரிசோதித்தும், உரைவரைந்தும் பதிப்பித்து உள்ளனர். பிற்காலத்தில் இவை பல பதிப்புக்களையும் பெற்றுள்ளன. அனைத்துப் பதிப்புக்களிலும் பாடல்களின் மாற்றமில்லாத அமைப்பே காணப்படுகின்றது.

குறுந்தொகைப் பாடல்களில் தலைவன் கூற்றில் 62 பாடல்களும் தலைவி கூற்றில் 181 பாடல்களும், தோழிகூற்றில் 139 பாடல்களும்,

பாங்கன் கூற்றில் 2 பாடல்களும், செவிலி கூற்றில் 9 பாடல்களும், கண்டோர் கூற்றில் 3 பாடல்களும், பரத்தையர் கூற்றில் 5 பாடல்களும் அமையப் பெற்றுள்ளன.

மேற்குறித்த அகமாந்தர் கூற்றுகளில், அவர்களோடு தொடர்புடைய, அவர்கள் கூறுதற்குரிய உரிப்பொருள் இடம் பெற்றுள்ளமை குறிக்கத்தக்கன:

தலைவன் கூற்றில் தலைவியின் நலம் பாராட்டல், தோழியிற் கூட்டம் வேண்டல், இரவுக்குறி மறுத்து நெஞ்சுக்குக் கூறுதல், இயற்கைப் புணர்ச்சி மகிழ்தல், இயற்கைப் புணர்ச்சியின் பின் பாங்கற்குரைத்தல், அல்ல குறிப்பட்டு நெஞ்சுக்குரைத்தல், மடற்கூற்று, வரைவு விரும்பல், பொருளீட்டற் பிரிவு, வினைமுற்றி மீளல், மீளுங்கால் பாகனுக் குரைத்தல், செலவழுங்குதல் முதலான உரிப்பொருள் அமைவுகள் குறுந்தொகைப் பாடல்களில் காணப்படுகின்றன.

தலைவி கூற்றில் இயற்கைப் புணர்ச்சி மகிழ்தல், தலைவன் பிரிவில் ஆற்றாமை வரைவு வேண்டுதல், பருவ வரவில் ஆற்றாமை, தலைவன் இயல்புரைத்தல், இரவுக்குறிக் கூற்று, அலர் கூறல், அறத்தொடு நிற்றல், ஊடல், வாயில் மறுத்தல், வாயில் நேர்தல் முதலான உரிப்பொருள் அமைவுகள் குறுந்தொகைப் பாடல்களில் காணத்தக்கனவாக உள்ளன.

தோழி கூற்றில் கையுறை மறுத்தல், இரவுக்குறி மறுத்தல், வரைவு கடாதல், அறத்தொடு நிற்றல், உடன்போக்குக்கு நயப்பித்தல், தமர் வரைவுடன்பட்டமை கூறல், பிரிவிடைத் தலைவியை ஆற்றுவித்தல், வாயில் மறுத்தல், வாயில் நேர்தல் முதலான உரிப்பொருள்கள் அமையப்பெற்றுள்ளன.

செவிலி கூற்றில் தலைவன் தலைவியின் களவுக் காதலை நற்றாய்க்கு வெளிப்படுத்தி அறத்தொடு நிற்றல், தலைவன் தலைவியின் உடன்போக்கில் இரங்கல் முதலியனவும், கண்டோர் கூற்றில் தலைவன் தலைவியின் உடன்போக்கில் அவர்தம் அன்பு போற்றுதல், அவர்தமக்காக இரங்குதல், உடன்போக்குச் செவினை விலக்க வேண்டுதல் முதலியனவும், பரத்தையர் கூற்றில் தலைவியின் பாங்காயினார்க்குத் தம்நிலை கூறல், தலைவியைப் பழித்தல் முதலியனவும் அமையப் பெற்றுள்ளன.

குறுந்தொகைப் பாடல்கள்வழித் தெரியப்படும் உரிப்பொருள்களைப் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல், இவை சார்ந்த நிமித்தங்கள் (நிகழ்வுகள்) முதலானவற்றைக் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் எனும் திணைகளுக்குரிய வகையில் தொகுத்தும்,பகுத்தும், வரன்முறைப்படுத்தியும் காணலாம். களவு, கற்பு எனும் இருநிலை நிகழ்வுகளுக்குரியவற்றை நிகழ்வு வரிசை முறையில் அறியத்தக்க வகையில் குறுந்தொகைப் பாடல்களை வரிசைப்படுத்திக் கோவை இலக்கிய அமைப்புப் போலப் பதிப்புச் செய்யலாம்.

# கவித்துளிகள்



—கவிஞர். பே.இராஜேந்திரன்



குழந்தையின் முத்தம்
அழகானதொரு ஹைக்கூ

குழந்தைகளே
நம் வாழ்க்கையின்
வெளிச்சங்கள்





தூங்கலையா...
அம்மாவின் அதட்டலில்
தூங்கியது விளையாட்டு



பாட்டியின் கதைக்காக
காத்திருக்கிறது...
தூக்கம்



காசில்லை
எனச் சொல்லும்
தருணமெல்லாம்
மரண வலிதான்
அப்பாக்களுக்கு.

# திருக்குறளும் சாணக்கிய நீதியும் கூறும் காகம் மற்றும் ஆந்தையின் குணங்கள்

முனைவர் **மெய்.சித்ரா**
ஆங்காங்

ஈராயிரம் ஆண்டுகளுக்கும் பழமையான திருவள்ளுவரின் இரண்டடித் திருக்குறளுடன் பல ஒப்பீடுகள் நடத்தப்பட்டுள்ளன. சமகால நூலான கௌடில்யரின் இரண்டடி சமஸ்கிருதப் பாக்களைக் கொண்ட சாணக்கிய நீதி நூலுடன் ஒப்பீடு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம். இரு நூல்களிலும் எண்ணற்ற பொருண்மைகள் இருந்த போதிலும், துவக்கமாய், காகம் மற்றும் ஆந்தையின் குணங்களைப் பற்றி இந்த இரு வேறு அறிஞர்கள் என்ன கூறி இருக்கிறார்கள் என்பதை இக்கட்டுரை விளக்க முயல்கிறது.

இந்தியாவில் காக்கைக்கென்று ஒரு தனிச் சிறப்பு உண்டு. காகம் கரிய நிறப் பறவை. அதற்கென்று சில குணங்கள் உண்டு. அதை 2000 ஆண்டுகளுக்கு முன்பே அறிஞர்கள் தங்கள் பாடல்களில் பயன்படுத்தி உள்ளனர். காக்கை பழமொழிகளிலும், சங்க இலக்கியங் களில் அகநானூற்றிலும், ஐங்குறுநூற்றிலும், குறுந்தொகையிலும், நற்றிணையிலும், பரிபாடலிலும், புறநானூற்றிலும், பதிற்றுப் பத்திலும், ஏழாவது ஆசாரக்கோவையிலும், மூதுரையிலும் பேசப்பட்ட பறவை.

அதை நம்முடைய முன்னோர்களாய் எண்ணி, தினந்தோறும் உணவு இடுபவர்கள் பலரும் இருக்கிறார்கள். அத்துடன் காகம் கரைந்தால், வீட்டிற்கு விருந்தாளி வருவார்கள் (விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே (குறுந். 210:6), ‘அஞ்சில் ஒதியை வரக்கரைந் தீமே’ (ஐங். 391:7)) என்ற நம்பிக்கையும் உண்டு. சனீஸ்வர பகவானின் வாகனமாய்க் காகம் கருதப்படுகிறது. அப்படிப்பட்ட காகத்தின் குணத்தைப் பற்றி நம் புலவர்கள் பலரும் பாடியுள்ளார்கள்.

திருவள்ளுவர் இரண்டு இடங்களில் காகத்தைப் பற்றி குறிப்பிடுகிறார். பொருட் பாலில் ‘சுற்றந்தழால்’ என்ற அதிகாரத்தில்,

**“காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**அன்னநீ ரார்க்கே உள”** **( குறள்–527)**

என்பார். இதற்கு உரை எழுதும் மு.வரதராசனார், இதற்கான பொருளை ‘காக்கை (தனக்குக் கிடைத்ததை) மறைத்து வைக்காமல் சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும். ஆக்கமும் அத்தகைய இயல்பு உடையவர்க்கே உண்டு,’ என்று விளக்கம் அளிக்கிறார். காக்கை தன்னுடைய சுற்றத்தாருடன் வாழும் பழக்கத்தைக் கொண்டது என்பதை இதிலிருந்து நாம் அறிகிறோம். இதையே ‘மறுவில் தூவிச் சிறு கருங் காக்கை அன்புடை மரபினின் கிளையோ டாரப் பச்சூன் பெய்த பைந்நிண வல்சி (391:1–3)’ என்று ஐங்குறுநூற்று வரிகளும் குறிப்பிடுகிறது. தாயுமானவரும் ‘காகமுறவு கலந்துண்ணக் கண்டீர்’ என்று காக்கையின் குணத்தைக் குறிப்பிடுகிறார்.

திருவள்ளுவர் காக்கையின் சுற்றுத் தாருடன் இருக்கும் குணத்தை எப்படிக் கூறுகின்றாரோ, அதேபோன்று காகத்திடம் இருந்து ஐந்து குணங்களைக் கற்றுக்

கொள்ளலாம் (4.14) என்று சாணக்கியர் குறிப்பிடுகிறார்.

“தனிப்பட்ட முறையில் காதல் செய்வது, துணிச்சல், பயனுள்ள பொருட்களைச் சேமித்து வைத்தல், விழிப்புணர்வு, எவரையும் எளிதில் நம்பாமல் இருத்தல், இந்த ஐந்து குணங்களையும் காகத்திடமிருந்து கற்க வேண்டியவை” (4.18) என்ற ‘பா’ வரிகளின் வழியாய்க் குறிப்பிடு கிறார். இதன் வழி காகத்தின் பல்வேறு குணங்களை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

மகாகவி பாரதியார் ‘காலைப்பொழுது’ என்ற கவிதையில், சாணக்கியன் நீதியில் வரும் ஒரு குணத்தையும் திருக்குறளில் வரும் ஒரு குணத்தையும் சேர்த்து, மேலும் நான்கு குணங்களைப் பாடுகிறார்.

**“காலை எழுந்திருத்தல் காணாமலே புணர்தல்**
**மாலை குளித்து மனை புகுதல் – சால**
**உற்றாரோ டுண்ணல் உறவாடல் இவ்வாறும்**
**கற்றாயோ காக்கைக் குணம்.”**

காணாமலே புணர்தல் மற்றும் உற்றாரோடு உண்ணுதல் என்று இரு குணங்களையும், அதற்கு மேல் காலையில் எழுதல், மாலையில் குளித்தல், மனை புகுதல், உற்றாரோடு உறவாடல் என்று ஆறு குணங்களைக் குறிப்பிடுகிறார்.

பொருட் பாலில் ‘காலமறிதல்’ என்ற அதிகாரத்தில்,

**“பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது”**
**(குறள்.481)**

என்பார். இதற்கு உரை எழுதும் மு.வரதராசனார், இதற்கான பொருளை ‘காக்கை தன்னைவிட வலிய கோட்டானைப் பகலில் வென்றுவிடும், அதுபோல் பகையை வெல்லக் கருதும் அரசருக்கும் அதற்கு ஏற்ற காலம் வேண்டும்’ என்று அளிக்கிறார். இதில் காக்கை ஆந்தையை விடவும் பகலில் கூடுதல் சக்தி வாய்ந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

திருவள்ளுவர் பகலில் காகம் ஆந்தையை வெல்வதற்கான காரணத்தை நேரடியாய்க் குறிப்பிடவில்லை. ஆனால் அப்பொருண்மையைச் சாணக்கியர்,

**“ஆந்தையால் பகலில் பார்க்க முடியவில்லை என்றால்**
**கதிரவனிடம் குறையா ?” (2.22:2)**

என்ற ‘பா’ வரி வழியாய், ஆந்தைக்குப் பகலில் காண இயலாது என்பதை முன் வைக்கிறார். கௌடிலியரும் தனது சாணக்கிய நீதி என்ற நூலில் காகம் மற்றும் ஆந்தையின் குணங் களைக் குறிப்பிடுகிறார். மேலும், காகமும் கருடனும் ஒன்று போல் தோற்றமளித்தாலும் அவற்றின் ஆற்றல் வேறுபட்டது என்பதை,

**“தகுதியே மனிதனை உயர்த்தும்**
**உயரமான இருக்கையில் அமர்வதாலல்ல**
**காகம் கருடன் ஆகுமா**
**அரண்மனையின் உச்சியில் அமர்வதால் ?”**
**(3.5)**

என்ற பாடல் வரிகளின் வழியாய்க் குறிப்பிடுகிறார். இவ்வாறு நம் முன்னோர்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கையைத் தங்களுடைய பாடல் வரிகளிலும் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். பறவைகளின் குணங்களை மனிதர்களோடு ஒப்பிட்டுள்ளனர்.

# துளிர்க்கும் சருகுகள்...

மனச்சான்று
குற்றத்திற்காகச்
செலுத்தும் அபராதமே
அச்சம்
– புளூடார்க்

நாம்
அடிக்கடி
அஞ்சுவதையே
சில சமயங்களில்
வெறுக்கிறோம்
– ஷேக்ஸ்பியர்

அச்சமே,
வருவதை
அறிவுறுத்தும் தாய்
– டெய்லர்

தன்னை(எதிரி)
வென்றுவிடுவானோ என்று
அஞ்சுபவன் நிச்சயமாய்த்
தோல்வியுறுவான்
– நெப்போலியன்

நல்ல
மனிதர்களுக்கு
அச்சங்கள்
குறைவு
– போவீ

## அச்சம்...

மனோன்மணியம் சுந்தரனாரின் பார்வையில்

# பத்துப்பாட்டு பாடல்களின் தொன்மையும், இலக்கிய நயமும்



முனைவர் **சு.மோதிலால் நேரு***
திருவனந்தபுரம்

**அழகிய தலைநகரமும் கம்பீரமான அரண்மனையும்**

மாலை நேரத்தில் இந்த மாநகரத்தில் நுழைந்து அதன் நதியைப் போன்ற அகன்ற வீதிகளில் நுழைந்தால் அங்கு பலம்பொருந்திய கட்டுமஸ்தான ஆண்களும், தளர்வான ஆடைகளை அணிந்த வெளிநாட்டினரும், மழையையும், காற்றையும் அலட்சியப்படுத்தி போதையில் அங்குமிங்கும் நடக்கின்றனர். இந்த வெளிநாட்டினரைக் குறித்து அதிகமாக அறிய விரும்பினாலும் கவிஞர் வேறு எந்த செய்தியையும் தரவில்லை.

இந்த வீதியில் இருபக்கங்களில் அமைந்திருந்த வீடுகளில் வசிக்கும் அழகான பெண்கள் தங்கள் கூடையில் உள்ள பூக்கள் மலர்வதைப் பார்த்து இரவின் வருகை ஊகித்து, விளக்குகளை ஏற்றவும், தங்கள் மாலை நேர பூஜையில் பூக்களையும், நெல்லையும் தூவினர். அவர்கள் வீட்டில் வளர்க்கப்படும் புறாக்கள் காலத்தைப் பற்றிய எந்த கவனமும் இன்றி தங்கள் இருக்கையை அங்குமிங்கும் மாற்றி, தங்களது வெறுமையை வெல்ல முயற்சி செய்து கொண்டிருந்தன. அங்கு பணியாளர்கள் கஸ்தூரிபோன்ற வாசனைத் திரவியங்களை கல்லில் உரைத்து தயார் செய்து கொண்டிருந்தார்கள். குளிர்காலமாக இருந்தால் சந்தனக் குழம்பு தேவைப்படுவோர்களும், மலர் மாலைகளை வாங்குபவர்களும் இல்லாமல் இருந்தது, அது மட்டுமல்லாமல் குளிர்ந்த தண்ணீர் பாத்திரங்கள் கூட கேட்பாரற்று பயன்படுத்தாமல் மூலையில் கிடந்தன.

வீட்டில் மடித்து வைத்திருந்த அந்த அழகான விசிறி கூட சிலந்தி வலையால் பின்னப்பட்டு இருந்தது. அதற்கு மாறாக நெருப்புச் சட்டிகளும், புகைப்பான்களும் பரவலாக பயன்படுத்தப் பட்டிருந்தது. இந்த குளிர்காலத்தில் ஏற்படும் ஜலதோஷம், கண் புரை போன்ற நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கைகளையும் காணலாம்.

நாம் மீண்டும் வீதியில் முன்னேறிச் செல்லும் பொழுது வாடைக் காற்றில் குளிர் தாங்க இயலாமல் மேல் மாடியிலுள்ள ஜன்னல் கதவுகள் அடைந்து கிடந்தன, மட்டுமல்லாமல் அவர்கள் பயன்படுத்திய அந்த விசாலமான காற்றோட்டமான படுக்கை அறைகள் கூட மூடப்பட்டிருந்தன. பெண்கள் தங்கள் நடனத்தை மறந்து வீணைகளின் சரங்களை நெருடியும், தடவியும் அதைப் பயன்படுத்த முயன்று கொண்டிருந்தார்கள். அரண்மனையின் கோபுரவாசல் சுரங்கம் போன்று தோன்றும். அந்த

வாசல் மிகப்பெரியதாகவும், பட்டத்து யானையின் மீது கம்பீரமாக அமர்ந்து பயணம் செய்யும் அளவுக்கு உயர்ந்தும், விசாலமாகவும் இருந்தது.

கோபுரக் கதவுகள் மிகவும் பலம் பொருந்தியவையாகவும், புகை கூட நுழைய முடியாத படி அவர்களின் கட்டிடக்கலை திறனுக்கும், அழகுக்கும் சான்றாக நின்றது. இந்த கவிஞனின் கருணையால் நமக்கு இந்த மாளிகையின் ஓரப்பாதை வழியாக அரண்மனையின் முற்றத்தை வந்தடைய முடிந்தது. அந்த முற்றத்தில் வெள;ளை மணல்கள் நேர்த்தியாக பரப்பப்பட்டிருந்தது. அரண்மனையில் வளர்க்கப்படும் கஸ்தூரிமான் மற்றும் விலங்குகள் விளையாடுமிடம் இது, ஆனால் தற்சமயம் அங்கு மனச்சோர்வும், ஆழ்ந்த நிசப்தமும் ஆட்சி செய்கிறது.

எப்போதாவது குதிரை லாயத்தில் நிற்கும், அந்த தின்று கொழுத்த எந்த வேலையும் இன்றி தினவெடுத்து நிற்கும் அந்த ஆண் குதிரைகளின் கனைப்பொலிகள் அந்த அரண்மனையின் மவுனத்தைக் கலைத்தது. மழைக்காலமானதால், அரண்மனையின் கூரையிலிருந்து மழைநீர் சலசலவென்று தரையில் வந்து விழுந்து கொண்டிருந்தது. இடையிடையே அரண்மனையில் வாழும் மயில்கள் குரல் எழுப்பிக் கொண்டிருந்தன.

அரண்மனை முற்றத்தில் ஏற்றி வைக்கப் பட்டிருந்த அந்த அலங்கார விளக்குகள் ஒளி வீசிக்கொண்டிருந்தன. இந்த யவன நாட்டுப் பொருள்களைக் குறித்து அதிகமாக அறிய விரும்பினாலும் கவிஞர் ஒன்றும் கூறாமல், நம்மை அரண்மனைக்கு உள்ளே அழைத்துச் சென்று அங்கு அமைந்துள்ள விசாலமான அலங்கார மண்டபத்தின் ஒளிவீசிக் கொண்டிருக்கும் விளக்குகளைப் பற்றி மிக அழகாகவும் விரிவாக கூறுகிறார்.

இந்த மாளிகை மிக உயர்ந்து மலை போன்று தோன்றியது. அந்த மாளிகையின் உச்சியில் பறந்து கொண்டிருந்த பல வண்ணக் கொடிகள் வானவில்லைப் போன்று அழகாகத் தோற்றமளித்தன. எவருக்கும் அனுமதி மறுக்கப்பட்ட இந்தப் பகுதிக்கு, அதாவது மன்னனைத் தவிர எந்த ஆண்மகனுக்கும் அனுமதி மறுக்கப்பட்ட இந்த இடத்திற்கு, கவிஞர் எந்தவித தயக்கமுமின்றி நம்மை மன்னரின் படுக்கை அறைக்கே அழைத்துச் செல்கிறார்.

## அரண்மனை அந்தப்புரம்

அந்த அறையில் தந்தத்தால் செய்யப் பட்ட கட்டில் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டு வலைகளால் மூடப்பட்டு, ஓவியங்களால் மெருகூட்டப்பட்டு, பஞ்சுமெத்தையில் பொதிந்து கிடந்தது. நமது கவிஞரின் நயமிகு வர்ணனையை ஆங்கிலத்தில் எழுத வேண்டுமென்றால் சர் வால்டர் ஸ்காட் என்ற எழுத்தாளரின் எழுத்துத் திறனும், புலமையும், மதிநுட்பமும் தேவை. நான் இவ்வாறு கூறுவதற்கு காரணமே, உங்கள் கவனத்தை இந்த மூல கவிதையின் மீது கொண்டுவருவதற்காக, அதன் இனிமையை, நுண்மையான, கவி நயத்தை நுகர்வதற்காக. சரி, இனி விஷயத்திற்கு வருவோம்.

அந்த அழகுமிகு கட்டிலில் ஒரு பெண் கண்களை அகலத் திறந்தபடியே படுத்திருப்பதை நமது கவனத்திற்கு கொண்டு வருகிறார். ஆனால் அந்தப் பெண், பிற ஆண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட அந்த இடத்தில் ஆண்கள் நிற்பதை கூட உணரமுடியாத அளவுக்கு துயரத்தில் ஆழ்ந்து இருக்கிறாள். அவள் எந்த அணிகலன்களையும் அணிந்து தனது இயற்கை அழகை மெருகூட்டவில்லை. அவளது மார்பின் மீது கிடக்கும் அந்த திருமண மங்கலநாணுடன் துணையாக ஒரு முத்துமாலையைக் கூட அணியவில்லை. ஒரு ஜோடி காது வளையம், அந்த விலைமதிப்பில்லா காதணியின் பணியை நிறைவு செய்தது. தற்சமயம் அவளது கையில் கங்கணம் இல்லையென்றாலும் அந்த அணிகலனின் அடையாளம் கைகளில் தெரிகிறது, அந்த இடத்தில் சிப்பியில் செய்த மலிவான கங்கணம் கிடக்கிறது.

அவளது அழகான விரல்களை அழகுபடுத்தும் விலை உயர்ந்த நெழிவுகுக்குப் பதில் ஒரு சிறிய மோதிரம் மட்டுமே அணிந்திருக்கிறாள். அவளது ஆடைகள் மிகவும் சாதாரணமாக இருந்தது. நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும் இந்த நள்ளிரவு நேரத்தில் மன்னரின் படுக்கை அறைக்குள் நுழைந்து இருக்கிறோம். மன்னனின் மனைவியோ வருத்தத்தால், நலிந்து, பொலிவிழந்து, உயிரோட்டம் பெற காத்துக்கிடக்கும் ஓவியத்தை போல் உறக்கமின்றி வருத்தத்துடன் பிதற்றிக் கொண்டிருக்கிறாள். இந்தப் பெண் பேதலித்த நிலையில் கண்ணை சுழற்றி கட்டிலின் மீது கிடைக்கும் வலையில் வரையப்பட்டிருக்கும் நட்சத்திரக் கூட்டத்தைப் பார்த்து, சந்திரன் பிற நட்சத்திரங்களை விட அதிகமாக அன்பு செலுத்திய ரோகிணியை ஒத்த தனது நிலையை மனதில் நினைத்து, கண்ணீர் பெருக்கெடுத்து ஓட, பார்வையில் தடை ஏற்பட்டு கலங்கிய நிலையில் கிடக்கிறாள். இந்த அரசியின் தலைவன் எங்கே, என்று பார்த்தால்...

## பாசறையில் மன்னர்

இந்த கேள்விக்கு பதில் தருவதற்காக கவிஞர் நம்மை வெகு தொலைவிலுள்ள வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்கிறார். அங்கு மழைக்காலம் என்பதால் மன்னன் தனது முகாமில் தங்கி இருக்கிறார். பின்னிரவு வேளையில் அந்த முகாமின் மூலையில் எங்காவதுதூங்கிக் கொண்டிருக்கிறாரா ? என்று பார்த்தால், அவர் தூங்கவில்லை. அவரும் காதல் உணர்வில் சிக்கி தவித்துக் கொண்டிருக் கிறாரோ என்று நினைத்ததற்கு மாறாக, நள்ளிரவில் அந்த மன்னன் பரபரப்பாக தனது கடமையை செய்து கொண்டிருக்கிறா;. அது என்ன என்று பார்ப்பதற்காக நமது கவிஞருடன் அங்கு நுழைந்தால், இந்த நள்ளிரவு வேளையிலும் தனது முகாமின் பல பாகங்களுக்கு சென்று, அங்கு காயமடைந்த தனது போர் வீரர்களுக்கு அன்புடன் ஆறுதல் கூறுகிறார்.

அவர் ஒரு குடையின்கீழ் கைவிளக்கின் வெளிச்சத்திற்கு பின்னால் நடந்து செல்கிறார். வடக்கு திசையில் இருந்து வீசும் அந்த கடுமையான துளைக்கும் வாடைகாற்று மிக


வேகமாக வீசுவதால், அந்த கொழுந்துவிட்டு எரியும் விளக்கின் தீ நாளங்கள் தெற்கு முகமாகச் சாய்ந்து ஒளி வீசுகின்றது. அவரது அருகில் நிற்கும் படைத்தளபதி முந்தைய நாள் போரில் காயமடைந்தவர்களின் வீரத்தை வெளிப்படுத்தும் அந்த அடையாளங்களை காண்பித்து அவர்களைக் குறித்து பெருமையாக பேசுகிறார். அவர்கள் அங்கிருந்து குதிரை லாயத்தின் அருகாமையில் வந்ததும், அங்கு போருக்குப் புறப்பட தயாராக சாணங்கள் பு+ட்டிய அந்தக் குதிரைகள், இரவும் பகலும் போருக்குச் செல்லத் தயார் என்பதை போல் கம்பீரமாக கனைத்துக் கொண்டு தங்கள் உடலை சிலிர்த்து, மேல் விழுந்த மழை நீர்த் துளிகளை விரட்டி அடித்துக் கொண்டிருந்தன. அந்த மன்னனும் சற்றும் குறைந்தவர் அல்ல, மன்னனின் போர்வாளை நம்பகமான மெய்காப்பாளர்களில் ஒருவர் கொண்டுவர, அந்த பரந்த மார்பை உடைய வீரனின் தோளில் உரிமையுடன் தனது வலது கையை போட்டபடி நடக்கிறார். போர் வீரர்களிடையே கோழை, துணிச்சலானவன் என்ற இரண்டு பாகுபாட்டைத் தவிர வேறு எந்தப் பிரிவும் கிடையாது. மன்னனும், அவன் துணைவியும் இந்த கொடுமையான மழைக்கால இரவை எவ்வாறு செலவு செய்கிறார்கள் என்று பார்த்தோம்.இந்த மாவீரன் போரில் வெற்றிபெற்று வெகு விரைவாக வந்து தனது அன்பான மனைவியுடன் கூடி வாழ வேண்டும் என்று யார் தான் விரும்ப மாட்டார்கள். இது நெடுநல்வாடையின் சுருக்கமாகும்.

## தமிழ்ச் சங்கத்தின் தகுதி உடைய தலைவர்– நக்கீரர்

எந்த ஒரு நாட்டிலும், மிகச்சிறந்த கவிஞர்கள் இடையே இடம் பெற தகுதியுடையவர் இந்த கவிஞர் என்று இந்தப் பாடலின் அசலை படித்த பிறகு நீங்கள் நிச்சயமாக கூறுவீர்கள். இந்தப் பாடலின் மையக்கருத்தும், இயற்கை எழில் சார்ந்த வர்ணனைகளும், சுற்றுப்புற சூழலை மிகத் தெளிவாக வரைந்து காட்டும் இவரது பாணியும், உண்மையாகவே பாராட்டத்தக்கது. இவரது இந்த படைப்புகளை மிக கவனமாக படித்தவர் களுக்கு மட்டுமே, ஏன் இந்த நக்கீரரை தமிழ் சங்கத்தின் தலைவராகவும், புலவர்களில் முதன்மையானவராகவும் கருதினார்கள் என்று புரியும். இதன் அடிப்படையில், நக்கீரர், சிவபெருமான் எழுதிய பாடலைக் குற்ற முடையது என்று கூறிய அந்த துணிச்சலான விமர்சனத்தின் உண்மையான பொருளையும், ஆழத்தையும் உணர முடியும்.

ஒரு உண்மையான கவிஞரின் மொழிபற்றையும், மன உறுதியையும், இயற்கையின் மீது கொண்டிருந்த காதலின் ஆழத்தையும், பாடலாக இருந்தால் கூட, அது கடவுளே எழுதியதாக இருந்தாலும், தவறான கருத்துக்கு உடன்பட முடியாது என்ற அவரது உறுதியான கருத்தைத் தெளிவாக கூறுகிறது இந்தக் கதை. நெடுநல்வாடையின் ஆசிரியரான இந்த பெருந்தகையை எந்த அளவுக்கு புகழ்ந்து வாழ்த்தினாலும் அது மிகையாகாது.

# திரு நகரங்கண்ட படலம்




திருவிளையாடல் புராணத்தில் மதுரைக் காண்டத்தில் மூன்றாவது படலம் 'திரு நகரங்கண்ட படலம்' ஆகும்

இப்படலம் மதுரை நகர் மாற்றம் பற்றியும் குறிப்பிடுகிறது. இப்படலத்தின் மூலம் இறைவனின் திருவிளையாடலால் கடம்பவனத்திற்கு 'மதுரை' என்ற பெயர் ஏற்பட்டதை நாம் அறிந்து கொள்ளலாம்.

கோயில் மாநகரமாக மதுரை புகழ்பெறக் காரணமான நிகழ்வுகள் இப்படலத்தில் விளக்கப்பட்டுள்ளன.



திரு. மு.அ.தங்கராஜு பாண்டியன்
ஓவிய ஆசிரியர், மதுரை

# தமிழ்ப் பகுப்பாக்கம் மற்றும் சொல்லாக்கம்

## பகுதி–I

திரு. சொல்லாக்கியன்
கனடா



### முன்னுரை

உலகில் வழங்கும் எல்லா மொழிகளும், தமிழ், சமஸ்கிருதம் உட்பட, மனித இனத்தால் உருவாக்கப்பட்டு, கற்பிக்கப்பட்டு, வளர்க்கப் பட்டு, திருத்தப்பட்டு, செழுமைப்படுத்தப் பட்டவையே. ஒரு மொழிக்கெனவே சங்கம் அமைத்து, அதன் இலக்கணத்தையும், இலக்கியத்தையும் ஒழுங்குபடுத்தி செழுமைப் படுத்திய தனிச்சிறப்பு, தமிழ் மொழிக்கே உண்டு. ஒரு சமுதாயத்தின் இயக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் ஏற்ப, அதன் மொழியும் மாறி வந்துள்ளது, சொல்வளமும் பெருகியுள்ளது. மொழி என்பது, தனிமனிதப் படைப்பாக்கம் அல்ல. அது, பல்வேறு காலங்களில் வாழ்ந்த பலப்பல மாந்தரின் பங்களிப்பால் விளைந்த சமூக மற்றும் வரலாற்று உற்பத்திப் பொருள் (Language is a Social and Historical product). மொழி என்பது ஒரு சமூகத்தின் பொதுச் சொத்து. அதை, ஒரு தனிப்பட்ட நபரோ, குழுவோ தனதென சொந்தம் கொண்டாட முடியாது. மொழி என்பது, ஒரு சமுதாயத்து மக்களின் உரிமை. மொழி எனும் சொத்தை, உரிமையைக் காக்க வேண்டியது, அச்சமுதாயத்தின் ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

### சொல்லாக்கத்தின் அவசியம்

ஒரு மொழியின் மாற்றமும், வளர்ச்சியும், அதன் வரலாற்று அடிப்படைகளைக் கொண்டும், உள் முரண்பாடுகள் இன்றியும் நிகழ்தல் வேண்டும். கிடைக்கப்பெற்ற தமிழ் மொழியின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம், தன்னுடைய புறநடைகளின் வாயிலாக, தமிழ் மொழியில் மாற்றத்தையும், வளர்ச்சியையும் ஏற்படுத்த வழிவகைகளைச் செய்துள்ளது. ஒரு பக்கம், மரபைக் காக்க வேண்டிய கடமையை, அறிஞர்களுக்கு அறிவுறுத்திய போதிலும், மொழியின் அடிப்படைகளுக்கு ஒத்திசைவான மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும் இடம் அளித்துள்ளது, தொல்காப்பியம். சமுதாய மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் ஏற்ப, மொழி ஈடு கொடுத்தாக வேண்டும் என்பதைத் தொல்காப்பியர் நன்கு அறிந்தவர் போலும். ஒரு சமுதாயத்தின் வளரச்சிக்கு ஏற்றவாறு ஒரு மொழி மாறவில்லை என்றால், வேறு ஒரு மொழியோ, பல மொழிகளோ, அதன் இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும்.

வரலாற்றை மீளாய்வு செய்வது போல், மொழியையும் மீளாய்வு செய்தல் வேண்டும். அத்தகைய மீளாய்வுகளால்தான், அன்று, தனித் தமிழ் இயக்கமே உருவானது. இன்றைய

கணிணி மனநிலையில், எண்ணிலடங்கா வகை வகையான புதிய சிந்தனைகள், எல்லாத் துறைகளிலும் தோன்றுகின்றன. காரண, காரியங்களைத் தேடுகின்றன. புதிய சொல்லாக்கங்கள், கணிணியின் மூலமாகவே கூட நிகழ்த்தப்படுகின்றன. நம்முடைய மொழிச்சிந்தனை உலகளாவியதாய் இருக்க வேண்டும், எதிர்காலத்தைக் கணக்கில் கொண்டதாய் இருக்க வேண்டும். ஆனால், அதே சமயம், மாற்றமும், வளர்ச்சியும், நம்முடைய தமிழ் மொழியின் இலக்கண அடிப்படைகள் சிதையாதவாறு, நிகழ்த்தல் வேண்டும்.

### சொல்லாக்க அடிப்படைகள்

ஒரு சமுதாயத்தின் பல்வேறு துறைகளில் நிகழும் மாற்றம் மற்றும் வளர்ச்சிக்கு ஏற்ப, இயல்பான, எளிதான, தெளிவான, இனிமையான, சுருக்கமான, இயன்ற அளவு பொருள் வெளிப்படையாய்த் தெரியும் சொல்லாக்கம், அதன் மொழியில் நடைபெறல் வேண்டும். ஏனெனில், தொல்காப்பியம், பெயரியலின் மூன்று நூற்பாக்கள், அவற்றை வலியுறுத்துகின்றன. அவை:

**152. 'எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.'**

சொல், பொருள் பொதிந்ததாய் இருக்க வேண்டும். சொல்லின் உயிர் அதன் பொருளே! பொருளற்ற எழுத்துக்குவியல் சொல்லல்ல.

**153. 'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்**
**சொல்லி னாகும் என்மனார் புலவர்.'**

ஒரு சொல்லை எப்படிச் சொல்ல வேண்டும் என்பதையும், அதன் பொருள் என்ன என்பதையும், அச்சொல்லே வெளிப்படுத்தல் வேண்டும்.

**154. 'தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்**
**இருபாற் றென்ப பொருண்மை நிலையே.'**

வெளிப்படையான பொருள் மற்றும் குறிப்புப் பொருள் என, பொருள் இரு வகைப்படும்.

தமிழ்ச் சமுதாயம், கலை, அறிவியல், வணிகம், பண்பாடு என பல்வேறு துறைகளில் வளர்ந்து விரிவடைகின்றது. அதற்கேற்ற தமிழ்ச் சொல்வளம், இன்றைய மக்களுக்குத் தேவை. சொல்லாக்கத்தாலேயே சொல்வளம் பெருகும். சொல்லை எப்படி ஆக்குவது ? சொற்கள் ஏற்கனவே எந்த அடிப்படையில், எப்படி உருவாக்கப்பட்டுள்ளன எனப் பகுப்பாக்கம் செய்து விட்டால், அதே அடிப்படைகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்கலாம் அல்லவா ?

### எழுத்துகளின் தோற்றம்

சொற்கள் உருவாக, எழுத்துகள் தேவை அல்லவா ? அப்படி என்றால், எழுத்துகள் எப்படி உருவாக்கப்பட்டன ? இன்றிருக்கும் ஒலி மற்றும் வரிவடிவ எழுத்துகள் போன்று, முதலில் எழுத்துகள் தோன்றவில்லை. அவை, பல வரலாற்றுப் படிநிலைகளைக் கடந்தே இன்றைய நிலையை வந்தடைந்துள்ளன. ஆதி மனித இனம், அருவி, ஆறு, காற்று, இடி, மழை போன்றவற்றின் ஒலிகளையும், வண்டுகள், விலங்குகள், பறவைகள் போன்றவற்றின் ஒலிகளையும், தம் இனத்திற்குள் பசி, காமம், கோபம், தாகம் ஆகியவற்றிற்காக ஏற்படுத்தும் ஒலிகளையும் பழகி இருக்கும். மனித இனம்,

இயற்கையின் சீற்றங்களில் இருந்தும், கொடிய, வலிமையான வன விலங்குகளிடம் இருந்தும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, கூட்டமாக அல்லது குழுவாக வாழ வேண்டியது அவசியம். அச்சமயம், அவர்கள் தங்களுக்குள் தொடர்பு கொள்ள வேண்டியதும் அவசியம். முதலில், ஒலிகளால் தொடர்பு கொண்டிருப்பர். அது போதாத போது, உடலசைவுகளாலும், பின்னர், கோலால் தரையில் கீறிய வடிவங்களாலும் தொடர்பு கொண்டிருப்பர்.

சமுதாயம் வளர்ந்த பின், பல்வேறு மக்கள் குழுக்கள் ஒன்று சேர்ந்து வாழும் நிலையில், பேச்சு மொழியுடன், பட வடிவங்களும், சித்திரங்களும், சின்னங்களும் (சிந்து சமவெளி நாகரிகத்தில் பயன்படுத்தப்பட்டது போல்) பயன்படுத்தப்பட்டிருக்கும். எகிப்திய நாகரிகமும் பட வடிவங்களைப் பயன்படுத்தி உள்ளது. சமுதாயம் வளர வளர, மனிதரின் கருத் துருவங்கள் நுண்மையானதாயும், சிக்கலான தாயும் மாறுகின்றன. அவற்றை வெளிப்படுத்த, படவடிவங்கள் போதுமானதாக இல்லாமல் போகலாம். சான்றாக, சிந்து சமவெளி நாகரி கத்தில் "பானை" எனும் படவடிவம், "தண்ணீர் இறைப்பதையோ, கொணர்வதையோ, தானியம் சேமிப்பதையோ"குறிக்கப் பயன்படுத்தலாம். அதையே "வானத்"தைக் குறிக்க பயன்படுத்த இயலாது. அதைப் போன்று, "மூடியுடைய பானை", "பாதுகாப்ப"தைக் குறிப்பிடலாம். "மனம்" என்பதைக் குறிக்க வேண்டும் என்றால், அப்பட வடிவைப் பயன்படுத்த முடியாது. ஆனால், இந்த பருண்மையானப் படவடிவை, அருவமான வரிவடிவமாக்கினால், பல்வேறு கருத்தாங்கங் களை வெளிப்படுத்த முடியும். (அதற்குள், சமுதாயத்தினர் பலரும், அருவப் பொருண்மை களை, பருண்மைப் பொருண்மையாக்கிக் கொள்ளும் அறிவுத்திறனை அடைந்திருப்பர்). அப்படித்தான், "திறந்த பானைப் படவடிவம்", "ப" எனவும், "மூடியிட்டப் பானைப் படவடிவம்", "ம"எனவும் ஆகி இருக்கும். இப்பொழுது, "ப்" அல்லது "ப" என்பது "கொள்ளல்" எனும் கருத்து எங்கெல்லாம் வருகின்றதோ, அங்கெல்லாம் பயன்படும்; "ம்" அல்லது "ம" என்பது "கொண்டு மூடியது" எனும் கருத்து எங்கெல்லாம் வருகின்றதோ, அங்கெல்லாம் பயன்படும். இப்படியே, பல படவடிவங்கள், வரிவடிவங்களாக மாற்றப்பட்டன.

(எழுத்து வரிவடிவம் மட்டுமல்ல. பேச்சு ஒலிவடிவமும் பற்பல மாற்றங்களை ஏற்றுக் கொண்டே இன்றைய நிலையை அடைந் திருக்கும். சான்றாக, "அ" எனும் ஒலியை, புதிதாய் கற்கும் குழந்தைகள் பல்வேறு வகைகளில் ஒலிப்பர். எவ்வளவு வாயைத் திறக்க வேண்டும், எவ்வளவு அழுத்தம் தரவேண்டும், எவ்வளவு நேரம் ஒலிக்க வேண்டும் என்பதை நாம்தான் கற்றுத் தருகிறோம். கற்றவர்கள் கூட, சில ஒலிகளை இன்றும் சரியாக ஒலிப்பதில்லை. சான்றாக, "ண, ந, ன", "ர, ற", "ல, ள, ழ" போன்ற ஒலி இனங்களை, வேறுபாடு இல்லாமல் ஒலிக்கின்றனர். காரணம், கற்பித்தலிலும், கற்றலிலும் நேர்ந்த குறைபாடு).■

# என் வாழ்வு

நான் பார்த்தவைகள் என் வாழ்நாள் பூரா
என்னை வளப்படுத்தும்
வளரும்போது, நான் தவறானதையே பார்த்தேன்
நியாயமானது சிறிதளவானது
துயரார்ந்த பாடலைக் கேட்கும்போது
என் முகத்தில் கண்ணீர் வழிகிறது
நான் கண்ணாடியில் பார்க்கிறேன்
மற்றபடி பொருத்தமற்றதாக உணருகிறேன்
நான் வாழ்க்கையைவிடப் பெரிதாக ஒன்றும்
மாற விரும்புகிறதில்லை
நான் மெய்யானதும், பிழையற்றதுமாகவே
மாற விரும்புகிறேன்.
நான் புரிந்ததை அவர்கள் புரிந்துகொள்வார்களா ?
வாழ்க்கை சிறப்புப் பெறுமா ?
முடியுமென்று நான் விரும்புகிறேன்
நான் ஒன்றைத் தீர்மானிக்கும் முன்பு
இருமுறை யோசிப்பேன்
அவர்கள் இன்னும் விஞ்சிய மேன்மையடைய
நான் என்ன உதவி புரிய வேண்டுமென்று
சொல்லுகிறார்கள்
இது என் வாழ்வு என்பதால் நான் எதுவும் கூறவில்லை.

# My life

The things I've seen will scar me for life.
Growing up, I've seen wrong and very little of right
I hear a sad song, and tears roll down my face.
I look in the mirror and feel so out of place
I don't want to become something larger than life.
I want to become something real and so right.
Do they understand am I understood?
Can life be better? I wish that it could.
Before I make a decision, I always think twice;
they say what can I do to help you feel better.
I say nothing because this is my life.

By
Lil Mafia



– சந்திரா மனோகரன்

# மாநிலத் தமிழ்ச் சங்கத்தின் பணிகள்

பேராசிரியர் முதுமுனைவர்
**பால் வளன் அரசு**
செயலாளர்,
மாநிலத் தமிழ்ச் சங்கம், பாளையங்கோட்டை



தங்கம் செய்யாததையும் சங்கம் செய்யும் என்பர். 1934ஆம் ஆண்டு பெரும்புலவர் இ.மு.சுப்பிரமணியன் உருவாக்கிய சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் 1980ஆம் ஆண்டு முதல் மாநிலத் தமிழ்ச் சங்கம் என்னும் புதிய பொலிவுடன் இயங்கி வருகிறது. 'தமிழ்க்காசு' என்னும் சட்ட மேதை கா.சுப்பிரமணியன் தலைவராகவும் திருமிகு நெ.சுப்பிரமணியன் பொருளாளராகவும் பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செயலாற்றியுள்ளனர். கலைச் சொல்லாக்கம், ஆட்சிச் சொல் அகராதி, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு, "தமிழ்த் தாய்" முத்திங்கள் இதழ், விழுமிய தமிழறிஞருக்கு விருது வழங்கிப் பெருமை செய்தல், சங்கப் பனுவல்களை எளிய உரை நடையில் வழங்குதல், முத்தமிழ் வளர்ச்சிக்காக நினைந்தும் முனைந்தும் வினையாற்றுதல் ஆகிய பணிகளில் கருத்தூன்றித் திட்டமிட்டுச் செயலாற்றி வந்துள்ளது. தெளிவும் துணிவும் கொண்ட விழுமிய தமிழ்த் தொண்டராகப் பெரும்புலவர் இ.மு.சுப்பிரமணியன் திகழ்ந்தார். பேராசிரியர் ஆபிரகாம் அருளப்பன், பேராசிரியர் செபரத்தினம் ஆகியோர் உறுதுணை புரிந்துள்ளனர்.

## சங்க வெளியீடுகள்

திருமுருகாற்றுப்படை உரை, மணி மாலை மாண்பு, நெல்லை மாவட்டக் கோவில் வரலாறு, சென்னை மாவட்டக் கோவில் வரலாறு, திருவள்ளுவர் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு(ஒன்பது தொகுதிகள்), இராமாயண அகவல், திருவாசகம் மெய்கண்ட உரை (இரு தொகுதிகள்), "தமிழ்த்தாய்" முத்திங்கள் இதழ், வெள்ளிவிழா மலர், பொன்விழா மலர், பவளவிழாச் சொற்பொழிவுத் தொகுப்பு, நாலடியார் உரை, குறிஞ்சிப் பாட்டு உரை, பட்டினப்பாலை உரை, கட்டபொம்மன் கும்மிப் பாடல்கள், விவேக சிந்தாமணி விளக்க வுரை ஆகியாவை தமிழ்ச் சங்க வெளியீடுகளில் குறிப்பிடத்தக்க சிறப்பு மிக்கவை.

## தமிழ்ச் சங்கக் கட்டடம்

நெல்லையிலும் பாளையங்கோட்டை யிலும் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வந்த தமிழ்ச் சங்கம், திருவனந்தபுரம் சாலையில் 2962 சதுர அடி நிலத்தை விலைக்கு வாங்கி 1987ஆம் ஆண்டு கட்டுவதற்கு வழக்கறிஞர் தூ.ஐயா சாமியும் வழக்கறிஞர் மு.ப.அழகிய நம்பியும் ஈடுபாட்டுடன் பணியாற்றினர். புலவர் சுந்தரம்

அவர்கள் வளாகச் சுவரையும் காவலர் அறையினையும் ஒதுக்கும் இடத்தையும் கட்டித் தந்தார். அவ்வப்போது மராமத்துப் பணிகளில் பாவலர் த.மு.சா. காசாமைதீன், இளமுனைவர் தி.முகுந்தன், திருக்குறள் இரா.முருகன், பொறியாளர் வி.பாப்பையா ஆகியோர் உற்றுழி உதவி நற்றமிழ் ஊழியம் புரிந்துள்ளனர். பெரும்புலவர் இராமானுசக் கவிராயரின் பேரன் இராமானுசம் தடையில்லா மின்சாரத்துக்கு ஏற்பாடு செய்துள்ளார்.

## பொறுப்பாளரும் விருது பெற்ற சான்றோரும்

சங்கத்தின் தலைவராகப் போரசிரியர் க.அன்பழகன், வழக்கறிஞர் இரத்தினவேல் பாண்டியன், சட்டப் பேரவைத் தலைவராகத் திகழ்ந்து பணி நிறைவு பெற்ற வழக்கறிஞர் செல்லப்பாண்டியன், தாளாளர் கி.ந.அம்மையப்பன், பாவலர் இராமானுசக் கள்ளப்பிரான் ஆகியோர் அடுத்தடுத்துப் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணியாற்றிய பெருமக்கள் ஆவர். ‘கவிமணி’ தேசிக விநாயகம் முதலிய அறிஞர் பதினேழுபேர் விருதுகள் பெற்ற பெருமைக்கு உரியவர் ஆவர். செழுங்கவிச் செம்மல் தி.சு. ஆறுமுகம், வித்துவான் சேதுரகுநாதன், பேராசிரியர் புன்னைவனநாதர், புலவர் வே.மாணிக்கவாசகம் போன்ற பெருமக்கள் ஒல்லும் வகையெல்லாம் தமிழ்ச் சங்கச் சான்றோராகச் செயலாற்றியுள்ளனர்.

## அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

மாநிலத் தமிழ்ச் சங்கத்தில் அறிவியல் அறிஞர் பெ.நா.அப்புசாமி, தெய்வப் புலவர் சேக்கிழார், வழக்கறிஞர் செல்லப்பாண்டியன், செய்குத்தம்பி பாவலர், பேராசிரியர் ஆபிரகாம் அருளப்பன், புலவர் தி.சு.ஆறுமுகம், இத்தாலியத் தமிழ் ஏந்தல் வீரமாமுனிவர், தாளாளர் அம்மையப்பன், இராமானுசக் கவிராயர் ஆகியோர் பெயரால் அறக்கட்டளைகள் அமைந்துள்ளன.

மாநிலத் தமிழ்ச் சங்கத்தில் தனித்தமிழ் இலக்கியக் கழகம், உலகத் திருக்குறள் தகவல் மையம், திருவருட் பேரவை இளங்கோ இலக்கிய மன்றம், கம்பன் இலக்கியச் சங்கம், விவேகானந்தர் மன்றம் ஆகியவற்றின் சார்பில் தொடர் சொற்பொழிவுகள் நடைபெற்றுள்ளன. ‘திறனாய்வுத் தென்றல்’ வீ.செந்தில் நாயகம் அவர்கள் தண்ணீர் தேசம், தொல்காப்பியம், ஐம்பெருங்காப்பியங்கள், காந்தி காவியம் ஆகியவற்றை விழுமிய தொடர் சொற்பொழிவுகளாக வழங்கியுள்ளார்.

முத்தமிழ் அவர்களின் உறுதுணையோடு கதிர் தொலைக்காட்சி மாநிலத் தமிழ்ச் சங்கத்தின் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகிறது. பதிவாளர் கிருபாகரன் முயற்சியால் புலனத்தின் வாயிலாகப் புதன்கிழமை தோறும் இணையவழிக் கருத்தரங்கம் நடைபெறுகிறது.


**செயலாளர்**

பேராசிரியர் முதுமுனைவர்

**பால் வளன் அரசு**

**தொடர்புக்கு :**

**மாநிலத் தமிழ்ச் சங்கம்,**

பாளையங்கோட்டை

# பெண் தந்த பெண்!

அன்பான என்கணவர் அருளை வேண்டி
அன்றாட ஒருகோயில் சென்று வந்தார்
பன்னீரில் மணமூட்டிப் பாலை ஊற்றிப்
பழம்கொடுத்துத் தேங்காயும் உடைத்து வந்தார்
பன்மலர்கள் கூடையிலே எடுத்துச் சென்று
பக்தியோடு காலடியில் தூவி வந்தார்
தன்மனத்தை ஒருமுகமாய்க் குவிய வைத்துத்
தனைமறந்து குறைகளைய வணங்கி வந்தார்!

மாங்காடு அம்மனோடு பேசி வந்தார்
மருவத்தூர் சக்தியினைக் கேட்டு வந்தார்
தூங்காத கூடல்மா நகர்மீ னாட்சி
துயர்தீர்க்கும் காஞ்சிநகர் நல்கா மாட்சி
தீங்ககற்றும் காசிநகர் வாழ்விசா லாட்சி
திருவேற்காடு கருமாரி பகவதி அம்மன்
பாங்குடைய சமயபுர மாரி யம்மன்
பாதங்கள் தொட்டுதொட்டே உருகி வந்தார்!


பெண்தெய்வம் இரங்குமென்றே ஊர்ஊ ராகப்
பெயர்சொல்வோர் இடங்களெல்லாம் தொழுது வந்தார்
கண்ணான தெய்வங்கள் என்றே போற்றிக்
கரம்கூப்பிக் கண்ணீரில் கழுவி வந்தார்
எண்ணத்தை ஏற்றன்னை கருணை பொங்க
எழிலான குழந்தையினை எனக்க ளிக்கக்
கண்ணில்தீ பொறிபறக்க நெருப்புச் சொல்லால்
கடித்தென்னைக் குதறிட்டார் பெண்ணாம் என்றே!

– பாவலர் கருமலைத்தமிழாழன்

# நாளும் ஒரு நற்சிந்தனை...
(கவிதை)

நூலாசிரியர் நீதியரசர் கற்பக விநாயகம் அவர்கள் உழைப்பால் உயர்ந்தவர். வழக்கறிஞராகத் தொடங்கி உச்சநீதிமன்ற நீதியரசர் வரை உயர்ந்தவர். நேர்மையானவர். காந்தியத்தைக் கடைப்பிடித்துக் காந்திய வழி நடப்பவர். ஒரு தீர்ப்பில் காந்தி அருங்காட்சியகம் சென்று சத்திய சோதனை நூல் படிக்க வலியுறுத்தியவர். மதுரை காலேஜ்ஹவுசில் நடந்த உலகத் திருக்குறள் பேரவையில் சிறப்புரையாற்றியவர். தெளிந்த நீரோடை போன்று உரை நிகழ்த்துபவர். மிகச்சிறந்த ஆளுமையாளரான இவர் எழுதியுள்ள அறநெறி போதிக்கும் அற்புத நூல் இது.

வானதி பதிப்பகம், பதிப்புச் செம்மல், மதிப்புறு முனைவர் வானதி இராமநாதன் சிறப்பான பதிப்புரை வழங்கி உள்ளார். உச்சநீதி மன்ற நீதியரசராக இருக்கும் வெ.இராம சுப்பிரமணியன் அவர்களின் அணிந்துரை நூலிற்கு மகுடமாக உள்ளது. உள்ளது உள்ளபடியே எழுதி உள்ளார். நூலாசிரியர் நீதியரசர் கற்பக விநாயகம் அவர்கள் வழக்கறிஞராக இருந்த போதிலிருந்து நீதிமன்றம் செல்வதற்கு நீதியரசர் இராம சுப்பிரமணியன் அவர்களையும் உடன் அழைத்துச் சென்றதை மறக்காமல் எடுத்தியம்பி நன்றியுடன் அணிந்துரை வழங்கி உள்ளார்.




நூலில் உள்ள எல்லாக் கருத்துகளும் சிறந்தவை தான். கடைப்பிடித்தால் வாழ்க்கையில் சிறக்கலாம். வாழ்க்கைக்குப் பயன்தரும் கருத்துகள் நிறைந்த பொன் மொழிகளின் சுரங்கமாக உள்ளது. புகழ்பெற்ற அறிஞர்களின் கருத்துகள், உரைகள்,



கவிஞர்
**இரா.இரவி**
மதுரை

**தலைப்பு : நாளும் ஒரு நற்சிந்தனை**
**வகை : கவிதை**
**ஆசிரியர் : நீதியரசர் மு.கற்பகவிநாயகம்**
**வெளியீடு : வானதி பதிப்பகம்**

நூலாசிரியர் நீதியரசர் மேடையில் உரையாற்றியது என அனைத்தையும் தொகுத்துச் சிக்கனமான வரிகளுடன் தத்துவ விருந்தாக, துன்பம் நீக்கும் மருந்தாக, தன்னம்பிக்கை விதைக்கும் விதையாக வழங்கி உள்ளார்.

பதச்சோறாக நூலிலிருந்து சில வைர வரிகள் மட்டும் இங்கே மேற்கோள்களாக எழுதி உள்ளேன். படித்துப் பாருங்கள். நூலினை வாங்கி முழுமையாகப் படித்துப் பயன் பெறுங்கள்.

**“நம்மை விரும்புவோருக்காக வாழ வேண்டும்!**

**நம்மை வெறுப்போருக்காக வாழ்ந்து காட்ட வேண்டும்!”**

என்ன வாழ்க்கை என்று விரக்தி அடையாமல் நம்மை விரும்புபவர்களுக்காக வாழ வேண்டும். நம்மை வெறுத்தவர் முன் வாழ்ந்து காட்ட வேண்டும் என்று உந்துசக்தி தரும் ஊட்டக் கருத்துகளை நூல் முழுவதும் வழங்கி உள்ளார். நூலாசிரியர் நீதியரசர் மு.கற்பக விநாயகம் அவர்கள் ‘ஆயிரம் ஹைக்கூ’ என்று நூலிற்கு நீண்ட நெடிய மதிப்புரை வழங்கி என்னை மகிழ்வித்தார்கள். பரபரப்பான நீதியரசராக இருந்த போதும் நேரம் ஒதுக்கி மதிப்புரை அனுப்பி வைத்தார். பண்பாளர், நெறியாளர். எளிமையானவர், இனிமையானவர், இப்படி எழுதிக் கொண்டே செல்லலாம். மிகச்சிறந்த மாமனிதர் நூலாசிரியர். ஆரோக்கியத்திற்கு வழிகள் ஏழு!

1. எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பது
2. எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பது
3. எப்போதும் திருப்தியாக இருப்பது
4. எப்போதும் புன்னகையோடு இருப்பது
5. எப்போதும் உற்சாகத்தோடு இருப்பது
6. எப்போதும் பணியில் ஈடுபடுவது
7. எப்போதும் பணிவாக இருப்பது

இந்த ஏழு வழிகளை வாழ்க்கையில் கடைப் பிடித்தால் நோய் வராது, நலமான வாழ்க்கை வசமாகும். கவலை, சோகம் மறந்து புன்னகை யுடன் மனமகிழ்ச்சியுடன் தொடர்ந்து செயல் பட்டால் ஆரோக்கியமான வாழ்வு கிட்டும் என்பதைக் கவிதை நடையில் தேர்ந்தெடுத்த சொற்களின் மூலம் இரத்தினச் சுருக்கமாக உணர்த்தி உள்ளார்.

**“அறுபது சொல்வது அனுபவ நிஜம் – அதை இருபது கேட்டால் ஜெயிப்பது நிஜம்”**

மூத்தோர் சொல் அமுதம் என்பதை அழகாக எழுதி உள்ளார். அனுபவம் மிக்கவர்களான அப்பா, தாத்தா சொல்வதை மகன், பேரன் என்ற இளைய தலைமுறையினர் கேட்டு நடந்தால் வாழ்க்கை இனிக்கும் என்பதை நன்கு உணர்த்துகிறது.

**“மரத்தின் பெருமை அதன் உயரத்தில்**
**இல்லை**
**அது உதிர்க்கும் பழங்களைப் பொறுத்தது**

**மலர்களின் பெருமை அதன் நிறத்தில் இல்லை**
**அதன் மணத்தைப் பொறுத்தது**
**மனிதனின் பெருமை அவனது பதவியைப் பொறுத்ததில்லை,**
**அவன் செய்கிற தொண்டைப் பொறுத்தது!**

பெரிய பதவியில் இருப்பது பெருமை அல்ல, அப்பதவியின் மூலம் எவ்வளவு தொண்டு செய்தோம் என்பதே முக்கியம் என்பதைப் பல உவமைகளுடன் எடுத்தியம்பியது சிறப்பாக உள்ளது.

**"இயலாமல் தோற்பது வேறு**
**முயலாமல் தோற்பது வேறு**
**இயலாமல் தோற்பது இழுக்கு**
**முயலாமல் தோற்பது பேரிழுக்கு"**

முயற்சி திருவினையாக்கும் என்பதையும் முயலாமல் இருப்பது முட்டாள்தனம், இழுக்கு என்பதையும் குறைந்த சொற்களின் மூலம் நிறைந்த கருத்துகளை வலியுறுத்தியது நன்று.

**"வெற்றி என்பது நாம் பெற்றுக் கொள்வது**
**தோல்வி என்பது நாம் கற்றுக் கொள்வது"**

எதையும் முயல வேண்டும், முயன்று தோற்றால் வருந்தாதே, அனுபவமாக எடுத்துக்கொள். அடுத்த முறை வெற்றி காண்பதற்கான பயிற்சியாக, அனுபவமாக எடுத்துக்கொள் என்று ஆறுதலான வார்த்தைகளின் மூலம் தோல்வியால் துவண்ட நெஞ்சத்திற்கு மருந்து தடவுகிறார்.

**"அடிபடாத தங்கம் ஆபரணம் ஆவதில்லை**
**துளை இடாத மூங்கில் புல்லாங்குழல் ஆவதில்லை**
**உளி படாத கல் சிலை ஆவதில்லை**
**சவால்கள் இல்லாத வாழ்க்கை சரித்திரம் ஆவதில்லை!"**

போராட்டம் தான் வாழ்க்கை. வாழ்க்கையில் போராடி வெல்ல வேண்டும். தோல்விக்குத் துவளக் கூடாது. சவால்களை எதிர்கொண்டு எதிர்நீச்சல் போட்டு வென்று காட்டுவதே வாழ்க்கை என வலியுறுத்தியது சிறப்பு.

**"மலர்ந்த முகம் நந்தவனம்!**
**மலர்ச்சி இல்லாத முகம் ஒரு மயானம்!"**

முகத்தை மலர்ச்சியாகப் புன்னகை ஏந்தியபடி இன்புற்று இருப்பது சிறப்பு. உம்மென்றும், உர் என்றும் சோம்பி இருப்பது நன்றன்று என்பதை மிக நுட்பமாக எழுதி உள்ளார். நந்தவனம் மயானம் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

**"ஒரு நல்ல பேச்சு எப்படி இருக்க வேண்டும்?**
**அருவியின் ஓசை! ஆற்றின் ஓட்டம்!**
**அலைகடலின் தாளம்!"**

இவை மூன்றும் கலந்ததாக இருக்க வேண்டும்.

நூலாசிரியர் நீதியரசர் மு.கற்பக விநாயகம் அவர்களின் உரையும் மேற்கண்ட வாறு தான் இருக்கும்.

பேச்சாற்றலால் சிகரம் தொட்டவர், எழுத்தாற்றலாலும் சிகரம் தொட்டுள்ளார். படித்து விட்டு வைத்து விடும் சராசரி நூல் அல்ல இது. மனதில் கவலை, விரக்தி வரும்போதெல்லாம் மறுவாசிப்புச் செய்து மனதைச் செம்மைப் படுத்திக் கொள்ள உதவிடும் சிறந்த நூல் இது. படிக்க, பாதுகாக்கப் பயன்படும் பண்பு வளர்க்கும் பண்பாளர் நூல்.■



# அந்தாதி கவிதை

## பனித்துளி...

(ரசனைக்கு மட்டுமே)

பனித்துளி விழுந்து
பயிர்கள் செழித்தது

செழித்து வளர்ந்து
செவ்வானம் நோக்கியது

நோக்கிய பயணம்
நோகாது வென்றது

வென்ற வேளாண்
விருத்திக்கு வித்து

வித்து முளைத்து
வேரினில் படர்ந்தது

படர்ந்தது பரங்கி
பருத்துப் பெருத்தது

பெருத்த விவசாயி
பெற்றிடும் மகிழ்ச்சி

மகிழ்ச்சி அடைந்த
மண்ணின் மைந்தர்

மைந்தர் இவரே
மானுடப் பரமன்

பரமனின் படைப்பில்
பாதரசப் பனித்துளி!!

– முனைவர் தமிழ்க்கவியோகி
சி.அண்ணாதுரை

# ஒரு டாக்ஸி கதை சொல்கிறது...

புதுமைத்தேனீ
மா.அன்பழகன்
சிங்கப்பூர்



அதிகாலை மணி மூன்று. சோபியா சாலை, பீஸ் செண்டரில் உள்ள புகழ்பெற்ற இரவு கேளிக்கை விடுதியின் கீழ் வந்து என் டாக்ஸியை நிறுத்தினேன். அந்தக் கிளப்புகளில் சேவை செய்யும் யீலிங் எனும் அழகி என்னைப் போனில் அழைத்தாள். அவளுக்காகக் காத்திருக்கிறேன்.

அந்தக் கட்டடத்தின் ஆறு தளங்களிலும் வெவ்வேறு பெயர்களில் கரவோக்கி பார் வசதிகொண்ட இரவு கேளிக்கை விடுதிகள் இயங்குகின்றன. முன்னிரவிலிருந்து ஆட்டம் பாட்டம் தொடங்கிவிடும். அந்த நேரத்தில் பார்த்தால், பெரும்பாலும் நம் சீன அழகிகள் உடை விஷயத்தில் கருமித்தனத்தின் உச்சிக்கே போய்விடுவார்கள். விடுதிக்கு வரும் போதும், போகும் போதும் மட்டும் எவற்றையோ மறைக் கிறோம் என்று காட்டிக்கொள்வதற்காக முற்றிலும் டிரான்ஸ்பெரண்ட் ஆடைகள், சுண்டி இழுக்கின்ற ஜிகினா பதித்து மின்னுகின்ற நீள அங்கிகளை நல்ல பிள்ளைகளாகப் போர்த்திக் கொண்டு வருவார்கள்.

நான் எதிர்பார்த்துக் காத்திருந்த, யீலிங் கொஞ்சம் தள்ளாடியவாறு இறங்கி வந்தாள். அவள் தன் கையைப் பிடித்துக்கொண்டு வம்பு செய்துகொண்டிருந்த இந்தோனேஷிய பணக்காரனிடமிருந்து விடுபட முயல்கிறாள்.

"பிளீஸ் வா! ஒருமணி நேரமாவது ஒரு ஹோட்டலுக்குப் போய்ட்டு வருவோம்"

"அப்படி வருவதற்கென்றே ஸோமெனி பியூட்டிபுல் கேர்ள்ஸ் இருக்கிறார்கள். அவர்களை இன்டிரொடியூஸ் பண்ணிட்டேனே ? அவர்களைப் போய்ப் பிக்கப் பண்ணிக்க"

"அவர்களைவிட உன்னைத்தான் எனக்குப் பிடித்திருக்கிறது. அதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. நீ தான் இதுவரையில் மற்றவர்களைப்போல் எந்த ஹோட்டலுக்கும் வந்ததே இல்லையாம். ஃபிரஷ் ஹேண்டாம். அதையும் அவர்கள்தான் சொன்னார்கள். பிளீஸ்லா வா. உனக்கு ஆயிரம் டாலர் தருகிறேன்"

"பணத்துக்காகத்தான் இதைப்போலக் கேளிக்கை விடுதிகளுக்குச் சேவை செய்ய வருகிறேன் என்றாலும் நீ அழைப்பதுபோல் ஹோட்டலுக்குப் போகிற அளவுக்கு என் மனதைத் தயார்ப்படுத்திக்கொள்ளவில்லை. அதில் எனக்கு விருப்பமும் உடன்பாடும் இல்லை. என்னை மன்னித்துவிடு"

"அப்படிச் சொல்லாதே! மேலே எனக்குப் பீர் ஊற்றிக்கொடுத்து எனக்குக் கிளுகிளுப்பு ஊட்டி உற்சாகப்படுத்தியதில் உனக்கு நிகர் யாரும் இல்லை. சிங்கப்பூருக்கு வணிக ரீதியாக வரும் நாட்களிலெல்லாம் நானும் பல கிளப்பு களுக்குப் போயிருக்கிறேன். பல பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் உன்னைப்போல்

எந்தப் பெண்ணையும் இப்படி நான் விரும்பிய தில்லை. நீ முடியாது... முடியாது என்று சொல்லச் சொல்ல உன்மீது உள்ள ஆசை அதிகரித்துக் கொண்டே வருகிறது.... சரி.. சரி.. ஐ ஆம் ஆஃபரிங் யு 2000.. பிளீஸ்..''


"இதோ பாரு. பணத்துக்காக இல்லை. என் மனத்திற்குப் பிடிக்காத ஒன்றைச் செய்ய எனக்கு இஷ்டம் இல்லை. நீ என்ன சொன்னாலும் என்னால் முடியாது. டாக்ஸி நீண்ட நேரம் இந்த இடத்தில் காத்திருக்கக் கூடாது''

"டாக்ஸிக்காரன் கிடக்கிறான். அவனுக்கு நூறு டாலரைத் தூக்கி எறிந்தால் வாயைப் பொத்திக்கொண்டு நிற்பான். அல்லது அவன் டாக்ஸியிலேயே நாம் போவோம்''

இந்த நேரத்தில் நான் குறுக்கிட வேண்டிய நேரம் வந்துவிட்டதாக உணர்ந்தேன். அவனிடம் சென்று,

"இதோ பாரு. அந்தப் பெண்ணுக்குப் பிடிக்காதபோது ஏன் கம்பல் செய்கிறாய்?.. அவளை விடு..'' என்று சொல்லி அவள் ஏறி அமர வசதியாக வண்டியின் பின் கதவைத் திறந்து விட்டேன்''

உடனே அப்பணக்காரன் என்னைப் பார்த்து, "நீ என்னடா ஆப்ட்ரால் ஒரு டிரைவர் தானே? உனக்கு ஏன் அவ்வளவு அக்கறை? இவளை வேற ஹோட்டலுக்குப் புக் செஞ்சிருக் கிறியா? அல்லது நீயே தள்ளிக்கொண்டு போகப்போறியா?'' என்று சொல்லி என்மீது அலட்சியம் காட்டி லேசாகத் தள்ளினான். நானும் அவன் உடலை வலுக்கட்டாயமாகத் திருப்பி'' மைண்ட் யுவர் பிஸ்னஸ்'' என்று வேகமாகத் தள்ளினேன். அவன் போதையில் இருப்பதால் எங்கே விழுந்து மண்டை உடைந்துவிடுமோ என்ற பயம் வேறு. என்னைவிட யீலிங்குக்கு



அதிகமான கோபம் வந்து, அவனை ஒரு முறை முறைத்துவிட்டு, என் கையை அணைத்துத் தடுத்து,

"டியோ (Teo)! நீ டாக்ஸியை எடு போகலாம்'' என்றாள்.

"நீ உள்ளே போய் உட்கார்'' என்று சொல்லி அவளை டாக்ஸிக்குள் தள்ளித் திணித்தேன். அதற்குள் அவன் வந்து என்னிடம்,

"ஒரு பிம்ப் பயலுக்கு அவ்வளவு திமிரா'' என்று சொல்லிவிட்டு என்னை அடிக்கக் கையை ஓங்கினான். அதற்குள் பக்கத்தில் நின்ற டிரைவர்கள் தடுத்துவிட்டார்கள். நானும் ஏறி அமர்ந்து வண்டியை ஸ்டார்ட் செய்தேன். அதற்குள் அவன் ஓடி வந்து தன் முகவரிக் கார்டை அவளிடம் கொடுத்து,

"எப்போது உன் மைண்ட் சேஞ்ச் ஆகிறதோ அப்போது என்னைக் கூப்பிடு. நான் எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன்'' என்றான். புறப்பட்ட போது அவள் அந்தக் கார்டை வெளியில் தூக்கி வீசியதையும் காற்றில் அது பறந்துகொண்டிருந்ததையும் பார்த்துக் கொண்டே டாக்ஸியைத் திருப்பினேன்.

டாக்ஸி வேகமாக வழக்கமான பாதையில் ஓடியது.

மௌனமாகவே யீலிங் தலையை நிமிர்த்தியவாறு சாய்ந்துகொண்டு இருந்தாள்

தொடரும்...



# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்...

(27.03.1892 - 19.07.1947)



அ.செல்வபாரதி
ஆய்வியல் நிறைஞர், சென்னை

**"சங்கத் தமிழ் கேட்க வேண்டுமானால் இருவரிடம் கேட்க வேண்டும். ஒருவர் பெரும் பேராசிரியர் சாமிநாதையர். மற்றொருவர் விபுலானந்தர்"**

**–சுத்தானந்த பாரதியார்**

இத்தகு புகழாரத்திற்கு உரியவர் சுவாமி விபுலானந்தர் அவர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் மறுமலர்ச்சியை உருவாக்கிய முன்னோடி ஆளுமைகளில் ஒருவர், துறவுநெறி வாழ்ந்தவர், இசைத் தமிழறிஞர், பேராசிரியர். இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை எனப் பல துறைகளில் இயங்கியவர். இசைத்தமிழ் ஆய்வு, இலக்கிய ஆய்வு, நாடகத்தமிழ் ஆய்வு, மொழியியல் என ஆய்வுப்பணிகளை விரித்து முத்தமிழ் வித்தகராய்த் திகழ்ந்தவர் சுவாமி விபுலானந்தர்.

சுவாமி விபுலானந்தரின் இயற்பெயர் மயில்வாகனன் ஆகும். இவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் ஊரில் 1892ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் நாள் சாமித்தம்பி, கண்ணம்மா தம்பதியரின் மகனாகப் பிறந்தார்.

## இளமைப் பருவமும் படிப்பும்

இவர் தன்னுடைய தொடக்கக் கல்வியை கல்முனை மெதடிசுட் ஆங்கிலப் பாடசாலை யிலும் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி யிலும் பயின்றார். அதன் பின் கொழும்பில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு விரிவுரையாளராயிருந்த தென்கோவை கந்தையா பிள்ளையிடம் பண்டைத் தமிழ் இலக்கியங்களைக் கற்றார்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1912ஆம் ஆண்டு ஆசிரியர் பட்டம் பெற்றார். 1915ஆம் ஆண்டு கொழும்பு அரசினர் தொழில்நுட்பக்கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்று 1916இல் அறிவியல் பட்டயத்தையும் பெற்றார். அத்துடன் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் பங்கேற்றுப் பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இலங்கையிலிருந்து இப்பட்டத்தை முதன்முதலில் பெற்றவர் சுவாமி விபுலானந்தரே. மேலும் 1920ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகம் நடத்திய இளங்கலை அறிவியல் தேர்வில் தேர்ச்சி அடைந்தார்.

## துறவறம்

மனதை ஈர்த்து வந்த துறவற உணர்வு, நாளும் பொழுதும் பெருகி, இராமகிருஷ்ண மிசனில் சங்கமிக்கத் துடித்துக் கொண்டிருந்தார். ஆசிரியப் பதவியைத் துறந்து 1922ஆம் ஆண்டு இராமகிருஷ்ண மிசனில் இணைந்து சென்னைக்குப் புறப்பட்டார்

மயில்வாகனன். சென்னையில் மயிலாப்பூர் மடத்தில் சுவாமி சர்வானந்தரிடம் துறவறத் தீட்சை பெற்றார். 1924ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சர்வானந்தரால் சுவாமி விபுலானந்தர் என்ற துறவறப்பெயர் வழங்கப்பட்டது.

### ஆசிரியப் பணி

விபுலானந்தர் தனது கல்லூரிப் படிப்பிற்கு இடையில் சிறிது காலம் புனித மைக்கேல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர்க் கொழும்பு அரசினர் தொழிநுட்பக் கல்லூரியில் இரசாயண உதவி விரிவுரையாளராகப் பணியாற்றினார். பிறகு 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக விரும்பி அழைத்தனர். அதனைப் பெருவிருப்புடன் ஏற்றுக் கொண்டார். விபுலானந்தரின் மொழிப்புலமையும் ஆற்றலும் அவருக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை அடையச் செய்தது.

திருகோணமலை கோணேசுவரா இந்துக்கல்லூரியில், 1925ஆம் ஆண்டிலிருந்து முகாமையாளராகப் பணியாற்றிய விபுலானந்தர் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் தனது செறிவான கவனத்தைச் செலுத்தும் பொருட்டு 1928இல் அதிபர் பதவியையும் ஏற்றுக் கொண்டார். 1926ஆம் ஆண்டிலிருந்து 1930 வரை திருகோணமலையில் இருந்தபடியே யாழ்ப்பாணம் இராமகிருஷ்ண மிசன் வைத்தீசுவர வித்தியாலயத்தின் முகாமையாளராகவும் செயற்பட்டார். இது மட்டுமன்றிச் சென்னை பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக் கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் பணிபுரிந்து உள்ளார்.

### கல்விப்பணி

தாய்மொழிக் கல்வி இன்றியமையாதது என்பதனை உணர்ந்த விபுலானந்தர் மட்டக் களப்பு சிவானந்த வித்தியாலயம், திருகோண மலை இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் வைத்தீசு வராக் கல்லூரி, காரைதீவு சாரதா வித்தியாலயம், ஆனைப்பந்திப் பெண்கள் பாடசாலை, உள்ளிட்ட பதினேழு பள்ளிகளை நிறுவி அல்லது மீளமைப்புச் செய்து பொறுப்பாளராக இருந்து நடத்தி வந்தார். இதன் விளைவாக ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய காலத்தில் தமிழ்ப் பிள்ளைகள் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் தமிழ்க் கல்வியை மட்டுமின்றி ஆங்கிலக் கல்வியையும் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. கல்வி நிறுவனங்களை மட்டுமின்றி ஆதரவற்ற மாணவர் தங்கியிருந்து கல்வி பயில விடுதிகளையும் நிறுவினார். மேலும் இலங்கை அரசின் கல்வித் துறைக்குச் சைவ சமயம் மற்றும் தமிழ் மொழிப் பாடத்திட்டங்களையும் வடிவமைத்துத் தந்தார். சென்னை அண்ணாமலை மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகங்களில் தமிழ் பாடத்திட்டங் களும் தேர்வுகளும் விபுலானந்தரது வழிகாட்டலிலேயே அமைக்கப்பெற்றன.

### அரசியல் பணி

இலங்கைத் தமிழ் அரசியல் கட்சிகளின் தொடக்கத்துக்கு அடி எடுத்துக் கொடுத்த அமைப்பு யாழ்ப்பாணம் இளைஞர் பேராயம் ஆகும். இதன் தலைவராக மட்டக்களப்பைச் சேர்ந்த விபுலானந்தர் தேர்வு செய்யப்பட்டதில் இருந்து அவர் மக்களுக்கு ஆற்றிய தொண்டும் பெற்றிருந்த நன்மதிப்பும் புலனாகின்றது.

இலங்கைக்கு வருகை தந்த காந்தி யடிகளை வரவேற்றார். ஆங்கில ஆட்சிக்கு எதிராகத் தமிழகத்தில் இந்தியத் தேசியக் கொடியை ஏற்றினார். இவ்வாறாக விபுலானந்தர் மூத்த விடுதலை வீரராகவும் அறியப்படுகிறார்.

### இலக்கிய வாழ்க்கை

தமிழிலக்கிய நூல்களை மீட்டெடுத்துப் பதிப்பித்தல் தமிழ் மறுமலர்ச்சியின் முதல்கட்டச் செயல்பாடாக இருந்தது. அந்நூல்களில் இருந்து தமிழரின் வரலாற்றையும், தமிழ்ப்பண்பாட்டின் தொன்மையான அடிப்படைகளையும் வாசித் தெடுத்து முழுமைப்படுத்துவது இரண்டாம் கட்டச்செயல்பாடு. இந்த இரண்டாம் கட்டச் செயல்பாட்டினைத் தன் வாழ்வின் நோக்கமாகக் கொண்டு தமிழ்த் தொண்டாற்றியவர் சுவாமி விபுலானந்தர்.

### இதழியல் பணி

இராமகிருஷ்ண மிசன் நடத்திய சிறீ இராமகிருஷ்ண விசயம் என்ற தமிழ் இதழுக்கும், வேதாந்தக் கேசரி (Vedanta Kesari) என்ற ஆங்கில இதழுக்கும் ஆசிரியராக இருந்து கட்டுரைகளை எழுதினார். பிரபுத்த பாரதா என்ற ஆங்கில இதழின் பொறுப்பாசிரியராகவும் இருந் தார். செந்தமிழ், தமிழ்ப் பொழில் ஆகிய தமிழ்ச் சங்க இதழ்களில் இலக்கியக் கட்டுரைகளை எழுதினார். இவரது கட்டுரைகள் சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்கள் என்ற தலைப்பில் மூன்று பாகமாக வெளியிடப்பட்டுள்ளது.

### இலக்கியத் திறனாய்வு

விபுலானந்தர் தமிழில் இலக்கியத் திறனாய்வு தொடங்கிய காலகட்டத்தில் எழுதியவர். மரபிலக்கியம் நவீன இலக்கியம் ஆகிய இரண்டு போக்குகளையும் இணைத்து ஆராய்வதற்கான கோட்பாடுகளை உருவாக்க அவர் முயன்றார். நாகரிக வரலாறு, எகிப்திய நாகரிகம், யவனபுரக் கலைச்செல்வம், மேற்றிசைச் செல்வம், ஐயமும் அழகும், உண்மையும் வடிவும், நிலவும் பொழிலும் ஆகிய அவருடைய கட்டுரைகள் முக்கியமானவை. இலக்கியத்தை ஒட்டுமொத்தத் தமிழ் நாகரீகத்துடன் இணைத்துப் பார்க்கவேண்டும், உலக நாகரீகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும், பிறகலைகளுடன் இணைத்து ஆராயவேண்டும் என்னும் கொள்கை கொண்டிருந்தார். மேலும் விபுலானந்தர் தமது சொற்பொழிவுகள் மூலம் தமிழரது அறிவையும் சிறப்பையும் பெருக்கினார்.

### மொழிபெயர்ப்புப் பணி

தமிழ் மக்கள் பயனடையும் வண்ணம் பிறமொழி நூல்களைத் தமிழ் மொழிக்கு மாற்றினார். தமிழ் மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுப் பெருமைகளைப் பிறமொழியினர் அறியும் வண்ணம் தமிழ் மொழி நூல்கள் பலவற்றை ஆங்கில மொழியில் அடிகளார் மொழிபெயர்த்தார். 'ஆங்கிலவாணி' என்னும் தலைப்பில் விபுலானந்தரின் ஆங்கில மொழி பெயர்ப்புக் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. ஷேக்ஸ்பியர் நாடகங்களை விபுலானந்தர் 'மதங்க சூளாமணி' என்னும் நூலாக மொழியாக்கம் செய்திருக்கிறார்.

### கலைச்சொல்லாக்கப் பணி

சுவாமி விபுலானந்தரின் தலைமையில் கலைச்சொல்லாக்கக்கழகம் 1934இல் அமைக்க ப்பட்டது. ஒன்பது அறிவியல் பிரிவுகளுக்குக் கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டன. இதன் பெறுபேறாக 1938இல் பதினாறாயிரம் தமிழ்க்

கலைச்சொற்கள் கொண்ட அகரமுதலி சென்னைத் தமிழ்ச்சங்கத்தினால் வெளியிடப் பட்டது. தமிழில் கலைச்சொற்களை உருவாக்க வேண்டிய அவசியத்தையும் ஒரே பொருளுடன் தொடர்புடைய ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லுக்கும் தமிழில் தனிச் சொற்களை உருவாக்க வேண்டும் என்பதையும் அறிவுறுத் தினார். கலைச்சொல் ஆக்கத்தின் பொழுது பழந்தமிழ் நூல்களைத் துருவி ஆராய்ந்து சுருக்கம், விளக்கம், தெளிவு, தமிழ் உருவம் ஆகியவை பொருந்துமாறு சொற்களை ஆக்குவித்த பெருமை அடிகளாரைச் சாரும். மூலத்தின் பொருளிலிருந்து விலகாமல் இருப்பது முக்கியம் என்பது அவரது மொழிபெயர்ப்பியல் கருத்தாக்கம்.

சுவாமி விபுலானந்தர் தலைமையேற்று நடத்திய தமிழ்க் கலைச்சொல்லாக்க மாநாடு 1936ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஞாயிற்றுக் கிழமை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்றது. சுவாமி விபுலானந்தர் கலை சொல்லாக்கக் குழுவின் தலைவராகவும், வேதியியல் கலைச்சொல்லாக்கக் குழுவின் தலைவராகவும் இருந்து செயல்பட்டார்.

## ஆய்வுப் பணி

சுவாமிகளின் தமிழிலக்கியப் பணிகளுக்கெல்லாம் மணிமுடி வைத்தாற் போல சிறந்து விளங்குவது அவரது இசையாராய்ச்சி நூலான 'யாழ் நூல்' எனலாம். இந்த நூலானது ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக மறைந்து கிடந்த தமிழரது இசை அறிவை வெளிக் கொண்டு வந்தது. இஃது பழந்தமிழரின் இசைக்கருவியான யாழ் பற்றிய சிறந்த ஆராய்ச்சி நூலாகப் போற்றப்படுகின்றது. விபுலானந்தரின் 14 ஆண்டு ஆராய்ச்சியின் பலனாக இந்த நூல் 1947ஆம் ஆண்டு கரந்தைச் தமிழ்ச்சங்கத்தால் வெளியிடப்பட்டது. மேலும் வங்கியம், சங்கீத பாரிசாதம், பாரிசாத வீணை ஆகிய இசை ஆய்வு நூல்களையும் இயற்றி யுள்ளார். அதுமட்டுமின்றி பிரபந்த நூல்களையும், நடராச வடிவம், தில்லைத் திருநடனம் முதலிய பக்தி நூல்களையும் இயற்றியுள்ளார்.

யாழ்நூல் அரங்கேற்றத்திற்குப் பின் உடல்நலக் குறைவுடன் இலங்கை திரும்பிய விபுலானந்தர் 1947ஆம் ஆண்டு சூலை 19ஆம் நாள் இரவு இறைவனடி சேர்ந்தார். அவரது உடல், அவர் உருவாக்கிய மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தின் முன்னாலுள்ள மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. ஈழத்து மக்களுக்கு இவர் ஆற்றிய சேவையினைப் பாராட்டி இலங்கையரசு தேசிய வீரர் வரிசையில் ஒருவராக இவரைச் சேர்த்துள்ளது. இத்துடன் நாட்டில் உள்ள பாடசாலைகளிடையே கொண்டாடப்படும் அகில இலங்கை தமிழ் மொழி தினம் இவரது மறைவு நாளான அன்றே கொண்டாடப்படுகின்றது. மேலும் விபுலானந்தர் பிறந்த ஊரான காரைத் தீவில் விபுலானந்தர் மணிமண்டபம் அமைத்தும் அங்குள்ள பொது நூலகத்திற்கு விபுலானந்தர் பெயரினைச் சூட்டி அங்கு அவரது திருவுருவச் சிலை அமைத்தும் அவரது நினைவினைப் போற்றியுள்ளது. இத்தகு சிறப்பு வாய்ந்த தமிழறிஞரின் தொண்டினைப் போற்றிடும் வண்ணம் நாமும் நம் தமிழுக்கு நம்மால் இயன்ற தமிழ்ப்பணி செய்வோமாக!

தடம்

## கனடா எழுத்தாளர்

# குருஅரவிந்தனும் தமிழும்...



**திரு.குரு அரவிந்தன்**
**(1937)**

கனடா நாட்டின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவர் குருஅரவிந்தன் அவர்கள். தன்னார்வத் தொண்டரான இவர் கணக்காளராகவும் சர்வதேச மொழித்திட்ட ஆசிரியராகவும் பணியாற்றுகிறார். கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், சிறுவர் இலக்கியம், பயணக்கட்டுரை என பல்துறை சார்ந்து எழுதிவருகிறார். இதுவரை சிறுகதை, புதினம், கட்டுரை, சிறுவர் இலக்கியமென இவரது 25 நூல்கள் வெளிவந்துள்ளன. இவரது கதைகள் பிறமொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

கனடாவில் குருஅரவிந்தன் அவர்கள் தனது இலக்கியப் பங்களிப்புக்காக ஒன்ராறியோ முதல்வர் விருது, கவணர் விருது, தமிழர் தகவல் விருது, உதயன் விருது, தமிழ்மிர்ரர் விருது, தூறல் விருது உள்ளிட்ட விருதுகளைப் பெற்றுள்ளார். இத்தகவல்களையெல்லாம் குருஅரவிந்தன் வாசகர் வட்டத்தின் செயலர் சுலோச்சனா அருண் அவர்கள் மின்னஞ்சலில் வழங்கினார். கனடாவில் தனது எழுத்தால் தமிழ் இலக்கிய உலகை ஆளுகின்ற குருஅரவிந்தன் அவர்களின் தமிழ்ப் பணிகளைப் போற்றிப் பாராட்டுவோம்!.

# ஆவண இலக்கியம்...

முனைவர் **உ. அனார்கலி**
மதுரை



தமிழ் மொழி காலந்தோறும் புதிய புதிய இலக்கியங்களைத் தோற்றுவித்து, சீரிளமையோடு சிறந்து விளங்குகிறது. 3000 ஆண்டுகளுக்கு முன்பே செழுமையான இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் மொழி தமிழ், இன்றும் புதியவைகளைத் தனதாக்கிக் கொண்டு வளர்ந்து வருகிறது.

பதினெட்டாம் நூற்றாண்டை, தமிழ் இலக்கிய வரலாற்றில், சிற்றிலக்கியக் காலம் எனக் குறிப்பிடுவர் அறிஞர்கள். பள்ளு, குறவஞ்சி, குறம், கலம்பகம், தூது, நொண்டி என வெவ்வேறு உள்ளடக்கத்தைக் கொண்டதாய் மக்கள் இலக்கியமாய், இசை இலக்கியமாய், கதை இலக்கியமாய்க் கிளை விட்டு செழித்து ஓங்கியது.

பள்ளமான விளைநிலப்பரப்பில் வேளாண் தொழில் செய்யும் பள்ளர்களின் வாழ்வியல் பற்றிப் பேசும் நூல் பள்ளு இலக்கியம் எனப்பட்டது. எண்ணிக்கையில் பல பள்ளு இலக்கியங்கள் இருந்தாலும், 'முக்கூடற் பள்ளு' முதன்மை இடத்தைப் பெற்று விளங்குகிறது. நெல்லின் வகை எண்ணினாலும், பள்ளு வகை எண்ண முடியாது எனப்படும் வழக்கு ஒன்று நம்மிடையே காணப்படுகிறது. உழத்திப் பாட்டின் வளர்ச்சி பள்ளு இலக்கியம் எனலாம். பள்ளு இலக்கியத்தின் தன்மையைக் கருத்தில் கொண்டு, உழத்திப்பாட்டு, ஏசல் பாட்டு என்றெல்லாம் குறிப்பிடப்படுகிறது.

கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று பேராறுகளும், ஒன்றாகக் கலக்குமிடம் திரிவேணி சங்கமம் எனப்படுகிறது. தமிழகத்தில், நெல்லை மாவட்டத்தில் தாமிரபரணி, கயத்தாறு, சிற்றாறு கலக்குமிடம் முக்கூடல் என்றழைக்கப்படுகிறது. முக்கூடற் பள்ளு, இலக்கியத்தில் பெரும் நில உரிமையாளரிடம் வடிவழகக் குடும்பன் என்பவன் பணி செய்கிறான். திருமாலை வணங்கக்கூடிய இப்பள்ளனுக்கு, இரு மனைவியர். இம் மனைவியர் பெயர்கள் அவரவர்களின் ஊர்ப் பெயரோடு கூட்டிக் காட்டப்படுகிறது. முதல் மனைவி வடகரையில் இருக்கும் ஆசூர் என்னும் ஊரைச் சேர்ந்தவள். எனவே ஆசூர் காரியென்றும் மூத்த பள்ளி என்றும் அழைக்கப்படுகிறாள். இளையவளோ மருதூரைச் சேர்ந்தவள் ஆதலால் மருதூர் பள்ளியென்றும் இளையபள்ளி என்றும் அழைக்கப்படுகிறாள்.

பள்ளியர் இருவருக்குள்ளும் ஏற்படும் இடைவிடாத உரிமைப்போர், படிப்போர் மனதைக் கவரும் வண்ணம் சுவைபட அமைந்துள்ளது. திருமாலை வணங்கக் கூடியவள் மூத்தபள்ளி, சிவபெருமானைத் தெய்வமாகக் கொண்டவள் இளையபள்ளி. பள்ளனை உரிமை கொண்டாடு வதில் மனைவியர் இருவருக்கும் இடைவிடாத போட்டி. போட்டி சண்டையாக மாறி, ஏசலாகிவிடும். தங்களின் உரிமையை நிலைநாட்ட இருவரும் தங்களின் பக்கம் இருக்கும் சிறப்புத் தகுதிகளை வரிசைப்படுத்தி வாயாடுவர்.

பிறந்த ஊர், வணங்கும் தெய்வம் என எல்லாவற்றிலும் இவர்களின் பெருமை தூக்கலாக இடம் பெறும். இவ் வாதங்கள் படிப்போரை வசப்படுத்தக் கூடியவை. மக்கள் இயற்கையோடு இயைந்து, அதை உற்றுக் கவனித்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை முக்கூடற் பள்ளு

இலக்கியம் படம்பிடித்துக் காட்டுகிறது. வெயில், கொட்டும் மழை, வீசும் காற்று இவற்றிலுள்ள நுணுக்கங்களைத் தெரிந்து, வானிலையை அறிவித்தனர். காற்று வரும் திசை, உயிரினங்கள், மின்னும் மின்னல், தவளையின் சத்தம், வளைக்குள் இருக்கும் நண்டின் செயல்பாடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு மறுநாள் மழை வரும், அதுவும் பெருமழை பெய்யும், அதன் பொருட்டு ஆற்றில் வெள்ளம் சுழித்து ஓடும் என்று துல்லியமாய் கணித்துச் சொல்லும் ஆற்றல் பெற்றவர்களாய் விளங்கியதை முக்கூடற்பள்ளு பதிவு செய்துள்ளது.

**“ஆற்று வெள்ளம் நாளை வரத்**
**தோற்று தேகுறி – மலை**
**யாள மின்னல் ஈழமின்னல்**
**சூழமின்னுதே**
**நேற்று மின்றும் கொம்புசுற்றிக்**
**காற்ற டிக்குதே – கேணி**
**நீர்ப்படு சொறித்த வளை**
**கூப்பிடு குதே**
**சேற்று நண்டு சேற்றில்வளை**
**ஏற்றடைக்கு தே – மழை**
**தேடியொரு கோடி வானம்**
**பாடி யாகுதே**
**போற்று திரு மாலழகர்க்**
**கேற்ற மாம்பண்ணைச் சேரிப்**
**புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடிக்**
**துள்ளிக் கொள்வோமே”**

என மழை வரும் சூழலை நுணுக்கமாய்க் கண்டறியும் வானிலை அறிவு, சூழல் அறிவு வியப்பைத் தருகிறது. உழைக்கத் தயங்காத உழவர்களின் உள்ளத்து அழகை, ‘ஆடிப் பாடித் துள்ளிக் கொள்வோம்’ என்ற தொடர் பதிவு செய்துள்ளது.

மழை வரப்போவதை அறிந்து ஆடிப்பாடும் பள்ளர்கள், வித விதமாய், வகைவகையாய் நெல்



வகைகளைப் பயிரிட்டு அறுவடை செய்ததை முக்கூடற் பள்ளு இலக்கியம் பதிவுசெய்துள்ளது.

**“சித்திரக் காலி, வாலான், சிறை**
**மீட்டான், மணல் வாரி**
**செஞ்சம்பா, கருஞ்சூரை, சீரகச் சம்பா,**
**முத்து விளங்கி, மலை முண்டன், பொற்**
**பாளை, நெடு**
**மூக்கன், அரிக்கிராவி, மூங்கில் சம்பா,**
**கத்தூரி வாணன், காடைக் கழுத்தன்,**
**இரங்கல் மீட்டான்**
**கல்லுண்டை,பூம்பாளை, பாற்கடுக்கன்,**
**வெள்ளை,**
**புத்தன்,கருங்குறுவை,புனுகுச்**
**சம்பாவும் இரு**
**பூவுக்கும் விதை சேரில் போட்டேன்**
**ஆண்டே”**

என்ற பாடல் குறிப்பிடுவன யாவை? என்ற வினா எழுகிறது. மேற்குறிப்பிட்டவை யாவும் அவர்கள் பயிரிட்ட நெல்வகைகளாகும். நெல்லிலிருந்து கிடைக்கும் அரிசி என்று குறுஞ் சொல்லால் குறிக்கப்படும் அரிசியில் இத்தனை வகைகளா! என்று வியக்கத் தோன்றுகிறது.

முக்கூடற் பள்ளு இலக்கியம், தான் தோன்றிய காலத்து மக்களின் வாழ்க்கையை அவர்களின் சூழலியல் அறிவை, பல்லுயிரின நெருக்கத்தை, தொழிலை, தொழில் நுட்பத்தை, தனிமனித மன உணர்வுகளை, சமுதாய அமைப்பு முறையைப் பதிவு செய்துள்ள ஓர் ஆவணமாக உள்ளது.■



உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

தமிழ்க்கூடல்
மற்றும்
நூல் அரங்கேற்றம்

அழைப்பிதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2054, பங்குனி - 17
நாள்: 31.03.2023 (வெள்ளி) நேரம்: முற்பகல் 10.00 மணி

வரவேற்புரை

முனைவர் சு.சோமசுந்தரி அவர்கள்
ஆய்வறிஞர், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

தலைமையுரை

திரு. மு.சம்சுதீன் அவர்கள்
இயக்குநர் (மு.கூ.பொ), உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

தமிழ்க்கூடலுரை

'இலக்கிய இன்பம்'

முனைவர் மோ.தமிழ்மாறன் அவர்கள்
மேனாள் பேராசிரியர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

'முதுமொழிக்காஞ்சி கூறும் அறநெறிகள்'

முனைவர் மா.பூரணி அவர்கள்
உதவிப் பேராசிரியர், காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி

# அறிவிப்பும்...

# அழைப்பும்...



தமிழ்க்கூடல் மற்றும் நூல் அரங்கேற்றம்

நூல் மதிப்புரை

முனைவர் இரா.இராஜேஸ்வரி அவர்கள்
கௌரவ விரிவுரையாளர், மதுரை

திரு. இரா.சந்தானகிருஷ்ணன் அவர்கள்
வழக்கறிஞர், மதுரை

முனைவர் அ.மோகனா அவர்கள்
உதவிப் பேராசிரியர், மதுரை

திருமதி சாந்தி சந்திரசேகர் அவர்கள்
எழுத்தாளர், மதுரை

ஏற்புரை

கௌசி (சந்திரகௌரி சிவபாலன்) அவர்கள், ஜெர்மனி
'பனிக்குடம்' – புதுக்கவிதை நூல்

திரு. தாமரைக்குளம் ப.தர்மராஜ் அவர்கள், சென்னை
'நிலத்திலும் பெரிதே' – மரபுக் கவிதை நூல்

திருமதி வே.பூங்குழலிபெருமாள் அவர்கள், புதுச்சேரி
'இலக்கியம் இனிக்குதே' – கட்டுரை நூல்

திரு. சி.ஸ்ரீரங்கம் அவர்கள், திருச்சி
'சிறுகதைப் புதையல்' – சிறுகதை நூல்

நன்றியுரை

செல்வி க.இரா.சிந்து அவர்கள்
புத்தகப்பூங்கா பொறுப்பாளர், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

நிகழிடம் : கூட்ட அரங்கம், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

அனைவரும் வருக! அமுதத்தமிழ் பருக!

# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## வேறெங்கும் இல்லாத வசதிகளுடன்

## மதுரையில்...

*நகரின் மையப் பகுதியில்...*
*குறைந்த வாடகையில்...*
*நிறைந்த வசதிகளுடன்...*
*அரங்குகள் வாடகைக்கு....*

**கலையரங்கம்**





**கூட்ட அரங்கம்**






### சிறப்பம்சங்கள்

- 400 பேர் அமரும் கலையரங்கம் ...
- 200 பேர் அமரும் இரண்டு கூட்டஅரங்கம்...
- 300க்கும் மேற்பட்டோர் உணவருந்தும் திறந்தவெளி உணவுக்கூடம்
- கண்காட்சி மற்றும் கடைகள் அமைப்பதற்கான விசாலமான இடவசதி
- சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்
- தூய்மையான கழிப்பறை
- பிரம்மாண்டமான மேடை அமைப்பு
- மின்காட்சி வெளியிடும் வசதி
- 24மணி நேர மின்சாரம்
- விசாலமான வாகனம் நிறுத்தம்
- பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகளுக்கு...
- அரசு சார்ந்த நிகழ்வுகள் மற்றும் விழாக்களுக்கு...
- சமயச் சார்பற்ற நூல்கள் வெளியிட...
- பண்பாடு, கலை, இலக்கியம் தொடர்பான நிகழ்வுகளுக்கு...

**பதிவுசெய்ய அணுகவும்...**

**உங்கள் நிகழ்வுகள்**
**நீங்காத நினைவுகளாக**
**வாழ்வில் நிலைத்திருக்க...**
**உடனே முன்பதிவு செய்யுங்கள்...**

**தொடர்புக்கு...**

0452–2530766/2530799
utsmdu2@gmail.com

முன்பதிவிற்கு
உடனே அணுகவும்

Uts Mdu @TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை



தமிழ் வளர்ச்சிக்கு புதிய ஆராய்ச்சிகள்: உலகத் தமிழ்ச் சங்க கருத்தரங்கில் வலியுறுத்தல்

மதுரை உலகத் தமிழ்ச் சங்கம், திண்டுக்கல் வளர் தமிழ் ஆய்வு மன்றம் இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்

## படைப்புகள் வரவேற்பு...

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையின் சார்பில் திங்கள்தோறும் வெளிவந்து கொண்டிருக்கும் உலகத்தமிழ் மின் ஆய்விதழுக்குக் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், ஓவியங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் தங்களின் சொந்தப் படைப்பாகவும் இதுவரை வெளியிடப்படாதவையாகவும் இருத்தல் வேண்டும். படைப்பாளர்கள் தங்களின் படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி : utsmdu2@gmail.com

(குறிப்பு: ஆசிரியர் குழுவால் தெரிவு செய்யப்படும் படைப்புகள் மட்டுமே இதழில் வெளியிடப்படும். படைப்புகளைத் திருத்தியமைக்க ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு).

நன்றி!

– ஆசிரியர்



# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## வெளியீடுகள்




<u>தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி</u>

இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக் கல்லூரி அருகில்,
மதுரை – 625020.

தொலைபேசி எண்:
0452 – 2530799
மின்னஞ்சல் முகவரி :
utsmdu.research@gmail.com